Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 060 | திங்கட்கிழமை | தை 12 ஆம் நாள் 25 ஜனவரி 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111

## மூதாட்டியின் சங்கிலி அறுப்பு!

*தொலைபேசிகளை வாங்கியதால் சிக்கினான் கொள்ளையன்*

யாழ்ப்பாணம், ஜன. 25
மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த பெண் ஒருவரின் இரண்டரைப் 19 >



தமிழ்க் கட்சிகள் இணைந்து

# அரசின் அபகரிப்பை எதிர்ப்பதற்குத் திட்டம்

## அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஜனவரி 25
தமிழ் மக்களுக்கு எதிராக அரசு அசுர வேகத்தில் முன்னெடுக்கும் நில அபகரிப்புத் திட்டங்களை எதிர்த்துப் போராட, கட்சி பேதங்களைத் தாண்டி, ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் திரளவேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார். 19 >

## கறுப்பு நாளாக சுதந்திர தினம்

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் முழுமையான கடையடைப்புக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 25
சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தைதமிழர்கள் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, வடக்கு கிழக்குதழுவியமுழுமையான கதவடைப்பை மேற்கொள்ள வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின்உறவினர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.
அந்த அமைப்பின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பணிப்பாளர் திருமதி பத்மநாதன் கருணா 19 >

## தமிழக மீனவர் நால்வரும் நீரில் மூழ்கியமையே இறப்புக்குக் காரணம்

*உடற்கூற்று அறிக்கையில் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன. 25
தமிழக மீனவர்கள் 4 பேரும் நீரில் மூழ்கியே உயிரிழந்தார்கள். அவர்களது உடலில் 19 >

## மோ.சைக்கிள் விபத்தில் இளைஞன் உயிரிழப்பு!

வவுனியா, ஜன. 25
வவுனியாவில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். 19 >

## கைதான இந்திய மீனவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

யாழ்ப்பாணம், ஜன. 25
இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மேற்கொள் 19 >

## முல்லை. சாலை கடற்கரையில் 53 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு

முல்லைத்தீவு, ஜன. 25
முல்லைத்தீவு சாலை கடற்கரையில் படகு மூலம் கொண்டு வந்து இறக்கப்பட்ட 53 கிலோ கேரளக் கஞ்சா 19 >

முச்சந்தி முரளி



"திட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது. அதை சட்டம் போட்டு மீறுற அரசு நிலத்தைப் பிடிச்சுக் கொண்டே இருக்குது"

## தூதுவர் நியமனங்களை 3 நாடுகள் ஏற்கவில்லை

கொழும்பு. ஜன. 25
கோத்தா அரசு வெளிநாடுகளுக்கான தூதுவர்களாக பரிந்துரைத்தவர்களில் மூவரின் நியமனங்கள் தற்போது சிக்கலாக மாறியுள்ளன. இந்தியாவுக்கான தூதுவராக பிரேரிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சரும் பாத் பைண்டர் நிறுவனத்தின் 19 >

## கோத்தாவின் ஆணைக்குழு இலங்கையை காப்பாற்றாது!

### சீனாவை நம்புவது பெரும் ஆபத்து என்று சஜித் அணி கடும் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 25
'இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை ஆராயும் வகையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சதலைமையிலான அரசு தற்போது அமைத்துள்ள ஆணைக்குழு நாட்டுக்கு எந்த விதத்திலும் கைகொடுக்கப்போவதில்லை. இது வெறுமனே கண்துடைப்பு நாடகம் 16 >

## பிரதேச செயலர் சுதர்சனுக்கு நேர்மைக்கு மகுடம் விருது!

கொழும்பு. ஜன. 25
2020ஆம் ஆண்டில் இலங்கையின் ஊழலற்ற அதிகாரிகள் தேர்வில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் ஐவரில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு 16 >





ஊடகர் சுகிர்தராஜன்

## நினைவுதினம் நேற்று கிழக்கில் கடைப்பிடிப்பு

மட்டக்களப்பு, ஜன. 25
படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் 15ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு, அம்பாறை மாவட் 16 >



## இலங்கை மாணவன் முதலிடம்

யாழ்ப்பாணம்.ஜன.25
கொதே(Goethe) கல்வி நிறுவனம் தெற்காசிய மட்டத்தில் நடத்திய ஜேர்மன் மொழி பிரயோகப் போட்டியில் இலங்கையில் இருந்து தெரிவான யாழ்ப்பாணம் பத்திரிசியார் கல்லூரி மாணவன் லைனஸ் அபிஸ்லின் முதலிடத்தை பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்துள்ளார். (ஐ)

# மூடநம்பிக்கை பின்னே ஓடிய அரசு பதவி விலகவேண்டும்!

## ஜே.வி.பி. வலியுறுத்து

**கொழும்பு, ஜன. 25**
**கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மூடநம்பிக்கைகளுக்கு பின்னால் ஓடி பொறுப்பற்ற விதத்தில் செயற்படும் கோத்தபாய அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.**

காலியில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டுஉரையாற்றுகையிலேயே ஜே.வி.பியின் அரசியல் குழு உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹத்துனெத்தி இவ்வாறு வலியுறுத்தினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா ஆரம்பத்தில் நாட்டில் பரவியபோது நாடு முடக்கப்பட்டு, அதனை கட்டுப்படுத்துவதற்கு காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதுமட்டுமல்ல அனைவருக்கும் நிவாரணமும் வழங்கப்பட்டது. செயலணிகள் அமைக்கப்பட்டு, மக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.
ஆனால் பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் காத்திரமான நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. தேர்தலில் வெற்றிபெற்றார்கள், மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் கிடைத்தது. இன்று கொரோனா வேகமாக பரவி வருகின்றது. பாணி அருந்தியவர்கள் உட்பட சுகாதார அமைச்சருக்குகூட வைரஸ் தொற்றியுள்ளது. நிலைமை இப்படி இருக்கையில் இன்னும் சமூகத்தொற்று இல்லை என்று விளக்கமளிக்கப்படுகின்றது.
பாணிமூலம் கொரோனா பரவலைக்கட்டுப்படுத்த முடியுமென்றால் அதனை அரசு சட்டபூர்வமாக செய்திருக்கவேண்டும். அதனைவிடுத்து ஆட்சியாளர்களே பாணிக்கு பரப்புரை செய்தனர். மக்களும் அதனை நம்பினர். கடைசியில் அதன்மூலமும் கொரோனா பரவியது. இவ்வாறு நாட்டை கீழ்மட்டத்துக்கு கொண்டு வந்து, பொறுப்பற்ற விதத்தில் செயற்படும் அரசு பதவி விலக வேண்டும். வாழ்க்கைச்சுமை அதிகரித்துள்ளது. ஆனாலும் நிவாரணங்கள் இல்லை, என்றார். (ஓ-44)

## கொரோனாவிலிருந்து மீண்டார் வாசுதேவ!

கொழும்பு, ஜன.25
கொரோனாத் தொற்றுக்குள்ளான அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கொரோனாத் தொற்றிலிருந்து பூரண குணமடைந்து சிகிச்சை நிலையத்தில் இருந்து வெளியேறியுள்ளார் என்று அவரின் ஊடகச் செயலாளர் தெரிவித்துள்ளார். இவருக்கு கடந்த 11 ஆம் திகதி கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து கொரோனாச் சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டார். தற்போது அவர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளார். (ற-இ)

## முள்ளிவாய்க்காலில் வெடிபொருள்கள் மீட்பு

முல்லைத்தீவு -முள்ளிவாய்க்கால் பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்ட வெடிபொருள்கள் நேற்று சில சிறப்பு அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.
சிறப்பு அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து முள்ளிவாய்க்கால் பகுதியில் போரின்போது புதைக்கப்பட்ட ஆர்.பி.ஜி. எறிகணை ஒன்று கைக்குண்டுகள் இரண்டு மற்றும் 60 எம்.எம் எறிகணைகள் மூன்று என்பன நிலத்தில் புதையுண்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.
மீட்கப்பட்ட வெடிபொருள்கள் சிறப்பு அதிரடிப்படையினரின் பாதுகாப்பில் உள்ளன என்றும் இவற்றைத் தகர்த்து அழிப்பது தொடர்பான கட்டளையை இன்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் பெறப்பட்டு இவை அழிக்கப்படவுள்ளன என்று முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்தனர். (ப-19)

## சுதந்திரக்கட்சியை மதிக்கவில்லையாம்!

### மீண்டும் புலம்புகிறார் மைத்திரி

கொழும்பு, ஜன. 25
ஆளும் கூட்டணியிலுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு உரிய கவனிப்பு இல்லை. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையில் பிரகாரம் சிறிலங்கா பொதுஜன பெரமுன செயற்படவில்லை என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
சிறிலங்கா பொதுஜன பெரமுனவால், தமது கட்சிக்கு அநீதி இழைக்கப்படுகிறது என சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தயாசிறி ஜயசேகரவால் முன்வைக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டு தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.
'ஆம். அப்படியான பிரச்சினை இருக்கின்றது. அவர் கூறிய கருத்தில் பிழை இல்லை. எமக்கான கவனிப்பில் குறை உள்ளது. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் எதுவும் நடைபெறுவதில்லை. உரிய வகையில் செயற்பட்டிருந்தால் இப்படியான குற்றச்சாட்டுகளை முன்வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.
எது எப்படி இருந்தாலும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பது பற்றியே அதிகம் கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதி மற்றும் பிரதமர் தரப்புகளில் இருந்து எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. மற்றுமொரு தரப்பாலேயே பிரச்சினைகள் எழுந்துள்ளன' என்றும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (ஓ-44)

## ஒரேநாளில் 9 பேர் கைது

கொழும்பு, ஜன.25
கடந்த 24 மணித்தியாலயங்களுக்குள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. முகக்கவசம் அணியாமை, சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்காமை தொடர்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையில் 2ஆயிரத்து 734 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## தோட்டத்தொழிலாளர்கள் நேற்றுப் போராட்டம்

மலையகம்.ஜன.25
தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வழங்குமாறு வலியுறுத்தியும், பொருள்கள், சேவைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் பூண்டுலோயா நகரில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் தோழர் மஞ்சுள சுரவீர தலைமையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
'வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளதால் மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நிவாரணம் வழங்கவேண்டிய அரசாங்கம், மாறாக பொருள்களின் விலைகளை அதிகரித்து வருகின்றது. இதனை எம்மால் ஏற்க முடியாது. ஆகவே, பொருள்கள், சேவைகளின் விலைகள் உடன் குறைக்கப்படவேண்டும்' என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர். (ஐ)



# போர்க்குற்ற சந்தேகநபர்களுக்கு சொத்து முடக்கம், பயணத் தடை!

## ஐ.நா. ஆணையாளர் எச்சரிக்கை

ஜெனிவா, ஜன. 25

**ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில், இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக, நம்பத்தகுந்தது என குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு சர்வதேச ரீதியில் சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடை என்வை விதிக்கப் பரிந்துரைத்துக்கப்பட்டுள்ளது.**

இந்த அறிக்கை தற்போது இலங்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்குப் பதிலளிக்க ஜனவரி 27 வரை காலஅவகாசம் உள்ளது என்று இலங்கையின் வெளியுறவு செயலாளர் அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்தார். மிச்செல் பச்லெட்டின் அறிக்கையின் படி, குற்றம் நிரூபிக்கப்பட்ட இலங்கையர்களுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவியல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அத்துடன் போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை ஆராயவும் ஆதாரங்களை சேகரிக்கவும் ஒரு சர்வதேச பொறிமுறையை அமைக்கும் பரிந்துரையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ.இ)

# தமிழ் மக்களை காக்கவே நாங்கள் போரிட்டோம்!!!

## ஐ.நா. ஆணையரின் அறிக்கைக்கு இலங்கை அரசு பதிலறிக்கை



கொழும்பு, ஜன. 25

தாங்கள் மக்களை பாதுகாப்பதற்காகவும் மக்களின் ஆணையின்படியுமே விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்டதை கருத்தில் கொள்ள வேண்டும் என்று அரசு ஐ.நா. மனித உரிமைகள் சபையிடம் வேண்டுகோள் விடுக்கவுள்ளது என்று வெளிவிவகார அமைச்சின் செயலர் அட்மிரல் ஜயனத் கொலம்பகே தெரிவித்தார்.

இலங்கையின் இறைமை மற்றும் உள்விவகாரங்களில் தலையிடுதல் போன்ற வழமையான செய்திகளை முன்வைக்கவுள்ளதுடன் இது தொடர்பில் வழங்கக்கூடிய விடயங்களையும் வழங்கவுள்ளது.

இலங்கையிலிருந்து ஜெனீவாவுக்கு செல்லவுள்ள பிரதிநிதிகள் அல்லது இணையவழியில் கலந்து கொள்ளவுள்ள பிரதிநிதிகள் யார் என்பது இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு பிரதான அனுசரணை வழங்கிய நாடுகள் மீண்டும் ஒரு புதிய யோசனையை முன்வைக்கவுள்ளன.

விடுதலைப் புலிகளே தற்கொலைக் குண்டுத் தாக்குதலை உருவாக்கினார்கள். தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடும் பெண் உறுப்பினர்களை உருவாக்கினார்கள். இரு உலகத் தலைவர்களை கொலை செய்தார்கள். 30 வருடப் போரில் மாதாந்தம் விடுதலைப்புலிகள் அமைப்பை சேர்ந்தவர்கள் உட்பட 250 பேர் உயிரிழந்தனர்.

2009ஆம் ஆண்டு மே மாதம் முதல் உயிரிழப்புகள் ஏற்படவில்லை. இதன் அர்த்தம் என்னவென்றால் அரசின் நடவடிக்கைகள் மூலம் உயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. என்னைப் பொறுத்தவரை வாழ்வதற்கான உரிமை என்பது மனித உரிமையை விட மிகவும் முக்கியமானது. ஏனென்றால் நீங்கள் முதலில் உயிர் வாழ்ந்தால் தான் மனித உரிமையை அனுபவிக்க முடியும். ஆனால் சர்வதேச சமூகம் போதியளவு பொறுப்புக்கூறலின்மை நல்லிணக்கமின்மை மற்றும் இழப்பீடுகள் வழங்கப்படாமை மற்றும் இந்த விவகாரங்களுக்குத் தீர்வைக் காண்பதற்கான உள்ளூர் பொறிமுறை அமைக்கப்படாமை போன்றவை தொடர்பாக இலங்கை அரசின் மீது குற்றம்சாட்டுகின்றது. என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ.இ)

# பாறையில் மோதி கப்பல் விபத்து

திருகோணமலை, ஜன.25

அபுதாபியிலிருந்து திருகோணமலைக்கு சீமெந்து ஏற்றி வந்த லைபீரியாவுக்கு சொந்தமான எம்.வி.யூரோசன் கப்பல் ஒன்று அம்பாந்தோட்டைக் கடலில் குடா ராவணா வெளிச்சவீட்டை அண்மித்த பகுதியில் பாறையில் மோதி நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானது என்று கடற்படை பேச்சாளர் இந்திக டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இந்தக் கப்பல் 10 மீற்றர் ஆழத்துக்குக் கடலுக்குள் சென்றுள்ளது. இதில் 18 பேர் பயணித்துள்ளனர். கப்பலின் மீட்புப் பணிகளுக்காக இரண்டு படகுகள் மற்றும் விசேட சுழியோடிகள் குழுவினரும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரையில் கப்பலில் எண்ணெய் கசிவோ, நீர் உட்புகுந்தமை தொடர்பிலோ எவ்வித தகவலும் பதிவாகவில்லை - என்றார். (ர-இ)

# சொன்னதைக் கேட்காததால் பவித்திராவுக்குத் தொற்று!

## பாணி மருத்துவர் சமாளிப்பு

கொழும்பு, ஜன.25

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி கொரோனா தொற்றுக்கு உள்ளானதையடுத்து கேகாலையைச் சேர்ந்த நாட்டு மருத்துவர் தம்மிக்க பண்டாரவின் கொரோனாத் தடுப்புப் பானி தொடர்பில் சந்தேகம் மேலும் அதிகரித்துள்ளது.

ஆனால், தமது அறிவுறுத்தல்களை மீறியதன் காரணமாகவே சுகாதார அமைச்சர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என்று தம்மிக்க பண்டார சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானமைக்கு தம்மால் பொறுப்பேற்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனாத் தடுப்புப் பாணி வழங்கப்பட்டபோது புகைப்பிடித்தல், மதுபான பாவனை, மாமிசம் உட்கொள்ளுதல் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும் எனத் தம்மால் ஆலோசனைகள் வழங்கப்பட்டன எனவும் அவர் கூறியுள்ளார்.

அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தாம் தவிர்க்கும்படி கூறிய இரண்டு விடயங்களைச் செய்ததன் காரணமாகவே இப்போது கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அண்மையில், தம்மிக்க பண்டாவால் தயாரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்புப் பாணியை சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி உட்கொண்டார். இது இலங்கையில் பேசு பொருளாகி இருந்தது. (ஒ-22)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, ஜன. 25

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்விளான் பகுதியில் சட்டவிரோத துப்பாக்கி பயன்பாடுகள் அதிகரித்துள்ளன என்று மல்லாவி பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று அதிகாலை மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் பற்றைக்காட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சட்டவிரோத நாட்டுத்துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

அருகில் உள்ள வீட்டின் உரிமையாளரை கைதுசெய்து விசாரித்தபோது அவர் தன்னுடையது என்று ஒப்புக்கொண்டார் என்று பொலிஸார் கூறுகின்றனர். (ஒ.19)

# புதிய அரசமைப்பு வரைவு இரண்டு மாதங்களில் வரும்

## நீதி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன. 25



புதிய அரசமைப்புக்கான சட்டவரைவு இன்னும் இரு மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார். புதிய அரசமைப்பை இயற்றும் பணிகள் தற்போது எந்தக்கட்டத்தில் உள்ளன? என்று எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான வேலைத்திட்டத்தை உருவாக்குவதற்காக நிபுணர்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு தற்போது கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் சம்பந்தமாக கவனம் செலுத்தியுள்ளது. இதன்படி இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் புதிய அரசமைப்புக்கான ஆரம்ப சட்டவரைவை அக்குழுவினர் கையளிப்பார்கள். அதன்பின்னர் இந்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும், என்றார்.

இதேவேளை, தான் ஜனாதிபதியாக பதவியேற்று இரண்டாவது வருடம் முடிவடைவதற்கு முன்னர் புதிய அரசமைப்பு இயற்றப்படும் என்ற உறுதிமொழியை ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ.44)

# ரென்னிஸ் பந்தில் போதைப்பொருள்!

கொழும்பு, ஜன.25

வெலிகந்த கந்தக்காடு கொரோனாச் சிகிச்சை மையத்தில் போதைப்பொருள் நிரப்பிய ரென்னிஸ் பந்துகள் இரண்டு நேற்றுமுன்தினம் இரவு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வெளிப்புறத்திலிருந்து இந்தச் சிகிச்சை மையத்தினுள் எறியப்பட்ட ரென்னிஸ் பந்துகளில் ஹெரோய்ன் மற்றும் கஞ்சா நிரப்பப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிகிச்சை மையத்தில் சிகிச்சை பெற்றுவரும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்களின் பாவனைக்காக தனி நபரொருவரால் அல்லது குழுவொன்றால் இவ்வாறு போதைப்பொருள் நிரப்பப்பட்ட ரென்னிஸ் பந்துகள் எறியப்பட்டிருக்கலாம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ர-இ)

# வாய்ச்சவடால் விட்ட அரசு அடிபணிந்தது ஐ.நாவுக்கு!

### ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பில் சஜித் அணி கருத்து

**கொழும்பு, ஜன. 25**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திலிருந்து விலகி விட்டோம் எனவும், இலங்கையை ஐ.நா. மிரட்ட முடியாது எனவும் வாய்ச் சவடால் விட்ட கோத்தாபய அரசு, இப்போது போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களின் அறிக்கைகளை மீண்டும் பரிசீலிப்பதற்கான மூவரடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்துள்ளது. ஆரம்பத்தில் வீர வசனம் பேசிய அரசு, தற் போது ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்தமை ஐ.நாவுக்கு அடிபணிந்தமைக்கு ஒப்பானதாகும்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் புதிய ஆணைக்குழு இந்த முறை ஐ.நாவின் பிடியிலிருந்து தப்புவதற்காக ஜனாதிபதி கோத்தா பய ராஜபக்சவால் அமைக்கப்பட் டதா என்ற சந்தேகமும் எழுந்துள் ளது. கடந்தகால ஆணைக்குழுக் களின் அறிக்கைகளை ஆராய் கின்றோம் என்ற பெயரில் காலத் தைக் கடத்தும் நோக்கிலும் புதிய ஆணைக்குழுவை இந்த அரசு நிறுவியிருக்கக்கூடும். எனினும், நாட்டு மக்களை ஏமாற்றுவது போல் ஐ.நாவையோ அல்லது சர் வதேச சமூகத்தையோ இந்த அரசு ஏமாற்ற முடியாது. ஐ.நாவின் உறுப்புரிமை நாடான இலங்கை, மனித உரிமைகள் சபையின் கொள்கைகளை மீறிச் செயற்பட முடியாது - என்றார். (ஒ-22)

# அரசின் ஆணைக்குழு ஒரு ஏமாற்று நாடகம்!

### சிறிநேசன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜன.25

காலத்தை இழுத்தடிப்பதற்காகவும், சாட்சியங்களை மறைப்பதற்கும், கால நீடிப்பைக் கோருவதற்குமே போலித்தனமான முறையில் அரசு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஆராய ஆணைக்குழுவை நிய மித்துள்ளது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப் பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

அரசு மக்களை ஏமாற்றும் செயலையே செய்கின்றது. இன்றைய அரசின் செயற்பாடுகள் தமிழ் மக்கள் மத் தியில் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளன.

1958 ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரை தமிழ் மக்கள் திட்டமிட்டு இன அழிப்புச் செய்யப்பட்ட னர். அவர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த காணிகளை அபகரிக்கும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படு கின்றன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்துக்கு மேல் கடந்துவிட்டது. இதுவரை போரில் இடம்பெற்ற எனக் கூறப்படும் உரிமை மீறல்கள், இன அழிப்புத் தொடர்பான விடயங்கள், போர்க் குற் றச்சாட்டு என்பவை பற்றி ஜனாதிபதி எந்தக் கருத்துக் களும் வெளியிடவில்லை.

அரசில் உள்ள விமல் வீரவன்ச போன்றவர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களை மறந்துவிடுங்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களை மண்ணைத் தோண் டிப் பாருங்கள் என்று கூறுகின்றனர்.

இப்போது ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆணைக்குழு என்ற ஒரு குழுவை அரசு உருவாக்கியுள்ளது. இது மக்களை ஏமாற்றும் செயலாகும். இதை மக்கள் ஒரு போதும் நம்பமாட்டார்கள்.

அரசின் பக்கம் நின்று தலையாட்டுபவர்கள் அனைத் துக்கும் தலையாட்டுவார்கள். ஜெனீவாவுக்கும் சென்று இங்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று சொல்வ தற்குக் கூட சாட்சியாக இருப்பார்கள். இதுவே உண்மை நிலையாகும். என்றார். (எ-இ)

# இனவாதத்தை முன்நிறுத்தி செயற்படாதாம் அரசாங்கம்!

கொழும்பு, ஜன.25

இனவாதத்தை முன்னிலைப்படுத்திச் செயற்பட வேண்டிய தேவை அரசுக்குக் கிடையாது. அனைத்து இன மக்களின் உரிமைகளுக்கும் அரசு மதிப்பளிக் கும்.

இவ்வாறு போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித் துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரி வித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழ் பேசும் மக்களை அரசு புறக்க ணித்துச் செயற்படுகின்றது என்று குறிப்பிட்டு பெரும்பான்மை சமூகத்துக் கும், சிறுபான்மை சமூகத்துக்கும் இடையே முரண்பாட்டைத் தோற்று விக்க எதிர்த் தரப்பினர் முயற்சிக்கின்ற னர்.

நல்லாட்சி அரசை உருவாக்க தமிழ் பேசும் மக்கள் அதிக பங்களிப்புச் செய் தனர். ஆனால் அவர்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை. பல உரிமை கள் மறுக்கப்பட்டுள்ளன.

அதில் பிரதானமாக மாகாண சபைத் தேர்தலைக் குறிப்பிட வேண்டும். எமது ஆட்சியில் வழங்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் உரிமையைக் கூட நல் லாட்சி அரசு பாதுகாக்கவில்லை. வெகு விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும்.

அனைத்து இன மக்களும் பொருளா தார மட்டத்தில் முன்னேறினால் சமூ கங்களின் மத்தியில் வீண் முரண்பாடு கள் தோற்றம் பெறாது. சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தில் நாட்டு மக்களின் முன்னேற்றம் தொடர் பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது- என்றார். (எ-இ)

# அடிபணிய வேண்டிய அவசியம் எமக்கில்லை

### சஜித் அணிக்கு அரசு பதில்

கொழும்பு, ஜன. 25

ஐ.நாவுக்கோ அல்லது சர்வதேச சமூகத்துக்கோ அடிபணிய வேண்டிய அவசியம் எங்க ளுக்கு இல்லை என்று அமைச் சரவைப் பேச்சாளரும் வெகு ஜன ஊடகத்துறை அமைச்சரு மான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததா வது:

நாம் மக்களால் தெரிவுசெய்யப் பட்ட அரசு. நாட்டின் நலன் கருதி உண்மைகளை வெளிப் படுத்தும் வகையில் ஜனாதிபதி தீர்மானங்களை எடுப்பார். அதில் ஒன்றுதான் புதிய ஜனா திபதி ஆணைக்குழு. மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வும், பொறுப்புக்கூறல் விடயங் கள் குறித்தும் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக் களின் அறிக்கைகளை மீண் டும் பரிசீலிப்பதற்காக மூவரடங் கிய ஆணைக்குழுவை ஜனாதி பதி நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தத் தீர்மா னத்தை எவரும் சவாலுக்குட்ப டுத்த முடியாது. கடந்த நல் லாட்சி அரசு போல் நாட்டின் இறையாண்மையை மீறி ஜனா திபதி செயற்படமாட்டார். புதிய ஆணைக்குழு தயாரிக்கும் அறிக்கையை இந்தமுறை நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை அமர்வில் சமர்ப்பிப்போம். அதில் நாட்டின் நிலைப்பாட்டைத் தெளிவாகக் குறிப்பிடுவோம்.

ஜெனீவா விவகாரத்தை தமது சந்தர்ப்பவாத அரசியலுக்குப் பயன்படுத்துவதை எதிரணியி னர் உடன் நிறுத்த வேண்டும் என்றார். (ஒ.22)

# பொருண்மியம் நலிந்த மாணவருக்கு சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், ஜன.25


பொருண்மியம் நலிந்த மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் அவர்க ளுக்கு இலவசமாக சைக்கிள்கள் வழங்கப்படவுள் ளன. இந்த நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தில் அதன் அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதற்கான நிதிப் பங்களிப்பை பெயர் குறிப்பிட விரும்பாத சுவிற்சர்லாந்தில் வசிக்கும் இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தின் பழைய மாணவர் ஒருவர் வழங்கியுள்ளார் என்று தெரி விக்கப்பட்டது. (ஐ)

# விபத்தில் ஒருவர் காயம்

கொடிகாமம், ஜன. 25

மோட்டார் சைக்கிளும், சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் பயணித்த முதியவர் காயமடைந்தார். அவர் சாவகச்சேரி ஆதார மருத் துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது. பாலாவி வடக்கைச் சேர்ந்த 65 வயதுடைய நா.கந்தசாமி என்பவரே விபத்தில் காயமடைந்துள்ளார். கொடிகாமத்தில் இருந்து புத்தூர்சந்தி நோக்கிச் சென்ற முதியவர் வீதியைக் கடக்க வீதி யின் குறுக்கே சென்றபோது, அதே திசையில் வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து நடந்தது என்று கூறப்படுகின்றது. (ரி5-159)



உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஜெனிவா எனும் சதுரங்கம்!

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் பொறுப்புக்கூறல் விடயங்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து அறிய இதுவரை பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. அந்தக் குழுக்களின் ஆய்வறிக்கைகளின் அடிப்படையில் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய அரசுகள் தாம் தப்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தனவே தவிர இதய சுத்தியுடன் செயற்படவில்லை.

இலங்கை அரசு. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வாய்ப்பிருக்கிறது சொல்லப்பட்ட நிலையில், ரணில் அரசுக்கு ஆதரவாக இருந்த தமிழ் கட்சிகளின் பொறுப்பற்ற போக்கால் கால அவகாசம் வழங்கப்பட்டது. அதனால் இலங்கை அரசு உடனடி விசாரணையில் இருந்து தப்பித்துக்கொண்டது. அதைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசும் அக்கால அவகாசத்தைப் பெற்றுக்கொண்டதோடு மட்டுமல்லாது இலங்கையில் போர்க்குற்றம் நடக்கவே இல்லை என்று சொல்ல ஆரம்பித்த நிலையிலேயே தற்போது நெருக்கடி நிலையொன்று தோன்றியுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 22 தொடக்கம் மார்ச் 19வரை ஜெனிவாவில் நடைபெறப்போகும் ஐ.நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில், கடந்த காலங்களில் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாக மேலதிக விபரங்களைச் சேகரிப்பதற்கும், மனித உரிமைகள் தொடர்பில் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் அவை தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்குமாக நீதிப்பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச் சபை கோரியிருப்பதை ஒரு புதிய வாய்ப்பாகக் கருதலாம்.


அது மட்டுமல்ல இலங்கையில் தற்போதைய அரசால் மேற்கொள்ளப்படும் மனித உரிமைகள் அமைப்புக்கள் மீதும், ஊடகங்கள் மீதும் ஏற்படுத்தப்படும் அடக்குமுறைகள் தொடர்பாகவும் ஐ.நாவால் ஏற்படுத்தப்பட்ட 30/1 தீர்மானத்தில் இருந்து இலங்கை அரசு விலகுகிறது என அறிவித்தமை தொடர்பாகவும் எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரில் அதிக கவனம் செலுத்துவதோடு அங்கு மனித உரிமைகள் ஆணையரால் முன்வைக்கப்படும் பரிந்துரையின் அடிப்படையில், ஒரு புதிய பொறிமுறையின் கீழ் செயற்பட இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படும் என எதிர்பார்க்கலாம். இதை சமாளிப்பதற்காகவே ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் தற்போது விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது என்று கொள்வதில் தப்பில்லை என்றே தோன்றுகின்றது.

முன்னெப்போதும் இல்லாதவாறு எதிர்வரும் ஜெனிவா அமர்வில் இலங்கை அரசு எதிர்பாராதவாறு பல நெருக்கடிகளைச் சந்திக்கப்போகிறது. இதனை உறுதிப்படுத்துவதாகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், பிரதான எதிர்க்கட்சிகளினதும் எச்சரிக்கைகள் அமைந்துள்ளன. அதனை உறுதிப்படுத்துவதாக ஐ.நா உரிமைகள் ஆணையரின் அறிவிப்பும் அமைந்துள்ளது.

ஜெனிவா கூட்டத்தொடரில் இம்முறை பல நெருக்கடிகளை இலங்கை எதிர்கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது இலங்கையிலுள்ள சிறுபான்மை மக்களுக்கோ அல்லது அரசினால் அடக்குமுறைக்குப்படுத்தப்படுகின்ற மக்களுக்கோ நீதி வழங்க வேண்டும் என சர்வதேசம் கொண்டுள்ள அக்கறையால் நிகழப்போவ தில்லை. மாறாக இலங்கை அரசு இழைத்த போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என்பவற்றை தமது ஆயுதமாக்கி அதனூடாக கோத்தாபய அரசைப் பணிய வைக்கும் சர்வதேசத்தின் உத்தியே இது.

ஏனெனில் இதே சர்வதேசம் தனக்குச் சாதகமான நல்லாட்சிக் காலத்தில் இப்படி நெருக்குவாரங்களைக் கொடுக்கவில்லை. நல்லாட்சி அரசுக்குச் சார்பாக கால அவகாசத்தை வழங்கி, போர்க்குற்ற விசாரணையில் ஒரு தளர்வுப் போக்கை ஏற்படுத்தியிருந்தது.

### இன்றைய கருத்துச்சித்திரம்




நன்றி - பிரதீப்

# பொறுப்புக்கூறலில் இருந்து அரசு தப்பவே முடியாது

## சம்பந்தன் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.25**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு மற்றும் புதிய விசாரணை ஆணைக்குழு போன்ற குறைபாடுடைய விடயங்களைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறல் கடமையிலிருந்து தப்பித்துவிட முடியாது.**

பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான எமது தீவிர செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதில் மாற்றமில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

இலங்கையில் இடம்பெற்றன எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும், பொறுப்புக்கூறல் விடயங்கள் குறித்தும் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மீண்டும் பரிசீலிப்பதற்கான மூவரடங்கிய ஆணைக்குழு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொறுப்புக்கூறல் விடயத்தில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் என்பவை கூட்டாக நிலைப்பாட்டை விவரித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளோம். மேலும் பொறுப்புக்கூறலைச் செய்விப்பதற்கும், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைப் பெற்றுக்கொள்வதற்குமான எமது முயற்சிகள் மேலும் தீவிரமாகத் தொடரும் என்பதையும் இலங்கை அரசுக்கு தெரிவித்துக்கொள்கின்றோம்.

உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸ் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மூவர் கொண்ட இந்த ஆணைக்குழுவில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, ஓய்வுபெற்ற மாவட்டச் செயலாளர் நிமால் அபேசிறி ஆகியோரும் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.


இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள், மனிதாபிமான சட்டமீறல்கள் தொடர்பாக இற்றைவரையில் இலங்கை அரசு பொறுப்புக்கூறவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது சம்பந்தமாக எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலும் கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இலங்கை அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்தத் தருணங்களிலும் அதன் பின்னருமான காலத்தில் அந்த பரிந்துரைகள், தீர்மானங்கள் தொடர்பாக இலங்கை அரசு எவ்விதமான நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்கவில்லை.

இந்நிலையில்தான் ஜனாதிபதி கோத்தாபய பழைய ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை விசாரணை செய்வதற்குப் புதிய ஆணைக்குழு ஒன்றை நியமித்திருக்கின்றார். இவ்வாறானதொரு ஆணைக்குழுவொன்று தற்போதைய சூழலில் தேவையற்றதொன்றாகும்.

இவ் ஆணைக்குழுவை நியமிப்பதன் மூலம் காலத்தைக் கடத்தலாம் என்று கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு எண்ணுகின்றது. பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகியன தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுவது போன்று காண்பித்து தமிழ் மக்களையும், சர்வதேசத்தையும் ஏமாற்றிவிடலாம் என்றும் இந்த அரசு கருதுகின்றது.

எம்மைப் பொறுத்தவரையில், புதிய விசாரணை ஆணைக்குழுவானது ஏமாற்றுவித்தையாகும். அதற்கு எவ்விதமான பெறுமதியும் இல்லை. அதன் விசாரணைகளும், அறிக்கைகளும் எவ்விதமான பயனையும் தரப்போவதில்லை. அதன்மீது எமக்கு நம்பிக்கையும் இல்லை. பொறுப்புக்கூறலைச் செய்வதற்கான எமது தீவிர செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்பதில் மாற்றமில்லை - என்றார். (எ-22)



## உயரழுத்த மின் கம்பத்தை மோதித் தள்ளியது லொறி!

வவுனியா, ஜன.25

வேகக் கட்டுப்பாட்டை இழந்த லொறி ஒன்று உயர் அழுத்த மின்சாரத் தூணுடன மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்து வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் கனரக வாகனமும், மின்சாரத் தூணும் சேதமடைந்தன. வாகனத்தின் சாரதி எவ்வித காயங்களுமின்றி தப்பிக்கொண்டார்.

பொலநறுவையில் இருந்து கிளிநொச்சி நோக்கி சென்ற கனரக வாகனமே வவுனியா புளியங்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த உயர் அழுத்த மின்சாரத் தூணுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விரைந்து செயற்பட்ட மின்சார சபையினர் மின் வழங்கலைத் துண்டித்ததால் அசம்பாவிதங்கள் எவையும் இடம்பெற்றிருக்கவில்லை. விபத்துத் தொடர்பான விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (வ-110)

## கலாம் வருகை நினைவாக யாழ். இந்துவில் மரநடுகை

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அறிவியல் மேதையும் இந்திய முன்னாள் ஜனாதிபதியுமான அப்துல் கலாம் கடந்த 2012 ஆம் ஆண்டு ஜனவரி 23 ஆம் திகதி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வந்த தினத்தை நினைவுகூர்ந்து நேற்று முன்தினம் மரம் நடுகை நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பாடசாலை அதிபர் ஆர்.செந்தில்மாறன் எமது கல்லூரியில் நினைவு தினம் கொண்டாடப்படுவதன் முக்கியத்துவமும் அப்துல் கலாமின் வாழ்க்கையும் மாணவர் முன்னேற்றத்துக்கு கற்றுத் தரும் விடயமும் என 'அக்கினிச் சிறகுகள்' நூலை அடிப்படையாக கொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வு சுகாதார நடைமுறைக்கு அமைய நடைபெற்றது. (ச)

## ஸ்ரீசண்முகானந்தாவுக்கு புதிய அதிபர் நியமனம்

சாவகச்சேரி, ஜன. 25

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தின் அதிபராக ச.துளசிதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் தனது கடமைகளை இன்று பொறுப்பேற்கவுள்ளார்.

வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றிய க.மகிந்தன் கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதை அடுத்தே துளசிதாசன் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அதிபராக நியமிக்கப்பட்டுள்ள ச.துளசிதாசன் இதுவரை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய பிரதி அதிபராகக் கடமையாற்றியிருந்தார். (ச-9)

# அழிவுகளைக் கணக்கெடுப்பர்; இழப்பீடுகள் கிடைப்பதில்லை

### அக்கராயன் விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஜன.25

மழை வெள்ளத்தால் நெல் அழிவை எதிர்கொண்டுள்ள விவசாயிகளுக்கு இழப்பீடுகள் கிடைப்பதில்லை. அதிகாரிகள் அழிவுகளைப் பார்வையிடுகின்றபோதும், இழப்பீடுகள் எவையும் எமக்கு வந்து சேர்வதில்லை.



இவ்வாறு அக்கராயன் நாகதம்பிரான் கமக்கார அமைப்பின் தலைவர் சி.கனகசபாபதி கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளம் வான் பாய்வதால் ஆண்டுதோறும் 200 ஏக்கருக்கு மேற்பட்ட நெற்செய்கை நிலங்கள் அழிவுகளை எதிர்கொள்கின்றன. இவை அதிகாரிகளால் பார்வையிடப்பட்டாலும் இழப்பீடுகள் கிடைப்பதில்லை. கடந்த பத்தாண்டுகளின் நிலைமை இதுதான்.

அக்கராயன் ஆறு குடமுருட்டி வரை முழுமையாகத் துப்புரவு செய்யப்பட்டால் இவ்வாறான பயிர் அழிவுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை என 10 ஆண்டுகளாக வலியுறுத்துகின்றோம். ஆனால் அக்கராயன் ஆறு துப்புரவு செய்யப்படவில்லை.

இழப்புகளுடன் விவசாயிகளால் தொடர்ச்சியாக விவசாயம் செய்ய முடியாது. அக்கராயன் குளம் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். முழுமையான அபிவிருத்திக்கு ஆயிரம் மில்லியன் ரூபா நிதி தேவைப்படும் என நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

கடந்த பத்தாண்டுகளில் ஜப்பானிய அரசின் நிதி உதவியில் 350 மில்லியன் ரூபா நிதியில் மட்டுமே வேலைகள் இடம்பெற்றுள்ளன. நீர்ப்பாசனத் திணைக்களம் அவ்வப்போது கிடைக்கின்ற சிறிதளவான நிதியில் வாய்க்கால்கள் வேலைகளை மட்டும் முன்னெடுக்கின்றது. என்றார். (வ-ரி2)



## நவீன வசதிகளுடன் புதிய கடைத்தொகுதி

யாழ்ப்பாணம், ஜன.25

வேலணைப் பிரதேசத்தின் அபிவிருத்தியை மையமாகக்கொண்டு வங்களாவடி நகரப்பகுதியில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய கடைத் தொகுதி ஒன்றை அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையை தற்போதைய சபையின் உறுப்பினர்கள் முன்னெடுத்துள்ளனர். இதற்கான அனுமதியை சபை 2018 ஆம் ஆண்டு ஏகமனதாக நிறைவேற்றி யிருந்தது.

இந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கான நிதி ஒதுக்கீடு தொடர்பாக இருந்துவந்த இழுபறி நிலை காரணமாக அதன் கட்டுமாணத்தில் தாமதமேற்பட்டது. தற்போது உலகவங்கி இந்த கட்டுமாணப் பணியை முன்னெடுப்பதற்கு நிதிப் பங்களிப்புச் செய்ய முன்வந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இந்த நவீன கடைத்தொகுதி அமையவுள்ள நிலப்பகுதியை உலக வங்கியின் பிரதிநிதிகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் திணைக்கள அதிகாரிகள், பிரதேச சபையின் தவிசாளர் கருணாகரகுருமூர்த்தி மற்றும் செயலாளர், உறுப்பினர்கள் அதிகாரிகளுடன் நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டனர். (ற-இ)

## அக்கராயன் வித்தி. நூலக திறப்பு விழா

கிளிநொச்சி, ஜன.25

மாகாணத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதியில் கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட நூலகக் கட்டடம் இன்று 25 ஆம் திகதி திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் க.மதுரநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு நூலகக் கட்டடத்தை திறக்கவுள்ளார். கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன் உள்ளிட்ட பலர் நிகழ்வில் பங்குகொள்ளவுள்ளனர். (ச-ரி2)

## குருகுலம் தொடக்க விழா


மானிப்பாய், ஜன.25

லோக ஷேம சபா, வேதசிவாகம குருகுலத் தொடக்க விழா எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணி வரை மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோவிலடியில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரக அதிகாரி ஸ்ரீ மீ.கிருஷ்ணமூர்த்தி ஐயர் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

# நிபுணர் குழு அறிக்கையை உதாசீனம் செய்வது ஆபத்து

## அரசுக்கு திஸ்ஸ எச்சரிக்கை



**கொழும்பு, ஜன. 25**
**இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்களை அடக்கம் செய்யலாம் என்ற நிபுணர் குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தாமல், காலம் தாழ்த்துவது தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். இவ்வாறு வைரஸ் தொடர்பான விசேட நிபுணரும் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

சோசலிச மக்கள் கட்சி கொழும்பில் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது
விசேட வைரஸ் நிபுணர்களின் அறிக்கையை அரசால் நியமிக்கப்பட்டுள்ள குழுவுக்குச் சமர்ப்பிப்பதில் எவ்வித பயனும் இல்லை. அறிக்கையை ஆராயுமளவுக்கு அந்தக் குழுவில் வைரஸ் தொடர்பான நிபுணர்கள் இல்லை.

இலங்கையில் கொரோனாவால் உயிரிழப்பவர்களை அடக்கம் செய்வதா? இல்லையா? என்ற பிரச்சினையை ஏற்படுத்தி, ஒரு சமூகத்தின் மத நம்பிக்கை அகௌரவப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு இந்த விடயத்தைத் தொடர்ந்தும் இழுத்தடிக்காமல், கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கான சுகாதார வழிகாட்டலொன்றை அறிமுகப்படுத்தி, அதற்கான அனுமதியை வழங்க வேண்டும், என்றார். (ஒ-22)

## கொரோனாவிலிருந்து மீள விசேட பூஜை வழிபாடுகள்!

யாழ்ப்பாணம், ஜன.25
இலங்கையில் வாழும் மக்களும், உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளைமறுதினம் புதன்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் மாதகல் நுணசைகூடல் விளாத்தி அருள்மிகு ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ இரந்தின மாணிக்க வாசகக் குருக்களின் அருளாசி உரையும் வேத பாராணமும் இடம்பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## சமுர்த்தி பயனாளிகளுக்கு மின்சார இணைப்புக்கள்!

கொழும்பு, ஜன.25
குறைந்த வருமானம் பெறுவோருக்கும், சமுர்த்தி பயனாளிகளுக்கும் இலாப நோக்கமின்றி மின்சார இணைப்புக்களை வழங்க வேண்டும் என்று அமைச்சர் டளஸ் அழகப்பெரும ஆலோசனை வழங்கியுள்ளார்.

அமைச்சில் இடம்பெற்ற அனைவருக்கும் மின்சார திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

மின்சாரம் இல்லாத சகலருக்கும் மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பது அரச பொறுப்பாகும். சமுர்த்திப் பயனாளிகளுக்கு மின்சாரம் கிடைப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் உயரலாம்.

மின்சாரம் இல்லாத குடும்பங்களுக்கு மின்சாரத்தை வழங்குவது அரச கொள்கையாகும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கும், சமுர்த்தி பயனாளிகளுக்கும் மின்சார இணைப்புக்கள் இந்த வருட இறுதிக்குள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (வ-இ)

## நாடாளுமன்ற வளாகத்தில் எவருக்கும் தொற்றில்லை!

### சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.25
நாடாளுமன்ற வளாகத்துக்குள் எந்தவொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டமை மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
நாடாளுமன்றத்தினுள் எப்பொழுதும் கொரோனா அவதான நிலை இருந்ததில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைத்து நிகழ்வுகளிலும் கலந்து கொள்பவர்கள். அவ்வாறு சென்றபோது தொற்று ஏற்பட்டிருக்கலாமே தவிர நாடாளுமன்ற வளாகத்தில் எவருக்கும் தொற்று ஏற்படவில்லை என்றார். (ற-இ)



## வீடு கையளிப்பு

வவுனியா, ஜன.25
வவுனியா மாவட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மையத்தின் நிதி அனுசரணையில் ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக பொருண்மியம் நலிந்த முதியவர் ஒருவருக்கு புதுவீடு ஒன்று அமைக்கப்பட்டு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் மக்கள் நல்வாழ்வு மையத்தின் தலைவர் க. சர்வேஸ்வரன், செயலாளர் சுந்தரசெல்வன் மற்றும் உறுப்பினர்கள் பலர் பங்கேற்று பயனாளியிடம் வீட்டைக் கையளித்தனர். (ச-222)



## பரிசோதனைக்கு ஒத்துழைக்காத வர்த்தக நிலையங்களுக்கு பூட்டு

வவுனியா, ஜன.25
வவுனியா நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பணியாற்றுபவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனையை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்டு வரும்நிலையில் அதற்கு ஒத்துழைப்பு வழங்காத வர்த்தக நிலையங்கள் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.சுகாதாரப் பிரிவினரால் நேற்று அது தொடர்பான எச்சரிக்கை அறிவித்தல் ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்த சுகாதாரப் பிரிவினர் அங்குள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பி.சி. ஆர் பரிசோதனைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தப் பரிசோதனைகளுக்கு சிலர் ஒத்துழைப்பு வழங்காத நிலையில், பரிசோதனைக்கு ஒத்துழைப்பு வழங்காத வர்த்தக நிலையங்களை மூடும் நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் சுகாதார பிரிவினரின் உத்தரவை மீறிய ஐந்துக்கு மேற்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு இந்த எச்சரிக்கை ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு வர்த்தக நிலையத்தைத் திறப்பதற்கான அனுமதியும் மறுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-18)

## மணல் மாபியாக்களால் மீடியாபாம் வீதிகள் சேதம்

### கிராம மக்கள் கண்டனம்!

வவுனியா, ஜன.25
வவுனியாவில் சட்டவிரோதமாக மணல் கடத்தலில் ஈடுபடுவோரால் வெண்கலச் செட்டிக்குளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆண்டியாபுளியங்குளம், மீடியாபாம் ஆகிய கிராமத்தின் வீதிகள் கடுமையாகச் சேதமடைந்துள்ளன என்று அந்தக் கிராம மக்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர்.

பெண் தலைமைத்துவம் மற்றும் வலுவிழந்தோர் உட்பட 60 குடும்பங்கள் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றன. மண் கடத்துபவர்கள் பிரதான வீதியைத் தவிர்த்து, இந்தக் கிராமத்தின் வீதியைப் பயன்படுத்துகின்றன. அதனால் வீதிகளை பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மீடியாபாம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மீள்குடியேற்றம் செய்யப்பட்ட எமது கிராமம் பொருண்மியம் நலிந்த குடும்பங்களைக் கொண்டது. எந்தவிதமான அபிவிருத்திகளையும் காணாது தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகின்றமை எமக்கு கவலையளிக்கின்றது என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (ரி5-110)

# இந்திய மீனவர் விவகாரம்; ஆராய மூவர் குழு நியமிப்பு

கொழும்பு, ஜன.25

இந்தியக் கடற்றொழிலாளர்களின் விவகாரம் தொடர்பான பரிந்துரைகளை வழங்க மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்பரப்பினுள் நுழைகின்ற இந்தியக் கடற்றொழிலாளர்களை தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் இலங்கைக் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், ஏற்பட்ட துரதிஸ்ட சம்பவத்தின் காரணமாக நான்கு இந்தியக் கடற்றொழிலாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான சூழலில், இந்த எல்லை தாண்டிய செயற்பாடுகளை நிரந்தரமாக நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு குறித்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு, கடற்றொழில் அமைச்சு திணைக்களங்களின் அதிகாரிகள், கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள், கடற்படை ஆகியவற்றுடன் கலந்துரையாடி இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய செயற்பாடுகளுக்கு நிரந்தரத் தீர்வை காண்பதற்கான பரந்துரைகளை கடற்றொழில் அமைச்சருக்கு வழங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ-இ)

# இயற்கை அழிப்புக்கு எதிராக கூட்டுச் செயற்பாடு தேவை

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு,ஜன.25

புதுக்குடியிருப்பு மருதமடு குளத்தின் கீழ் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வால் இயற்கை வளம் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று புதுக் குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயக்காந்தன் தெரிவித்தார்.

மருதமடு குளத்தின் கீழ் மற்றும் கள்ளவெட்டு குளத்துக்கு அருகில் உள்ள விவசாய காணிகள் வன வளத் திணைக்களத்தால் எல்லைப்படுத்தப்பட்டுள்ளபோதும் அந்த இடத்தில் மணல் அகழ்வு இடம்பெறுகிறது. மணல் அகழப்பட்ட இடங்கள் மழை காலங்களில் குளங்களாகக் காட்சியளிக்கின்றன.

அந்தப் பகுதிகளில் உள்ள பெரிய மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அகழப்படும் மணல் வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றன என்று பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் கிராம மக்கள் நேற்று பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளை அந்தப் பகுதிக்கு அழைத்து நிலைமைகள் தொடர்பில் விளக்கியுள்ளனர். நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்த பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே பிரதேச செயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது நிலைபேறான அபிவிருத்திக்காக இந்த வனப்பகுதியை பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் இந்த வளத்தை அனுபவிக்காது பிறபகுதியைச் சேர்ந்தவர்கள் வளத்தை சுரண்டுவதுடன், அழிகளையும் ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்கு கூட்டாக எல்லோரும் சேர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் இது பற்றிய முறையான அறிக்கையை வனவளப் பிரிவுக்கும், மாவட்டச் செயலருக்கும் அறிவித்து இனிவரும் காலத்தில் இதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ஜ-19)




## இருட்டில் 'ஏரிஎம்'

வவுனியா,ஜன.25

வவுனியா மூன்றுமுறிப்பு இராணுவ தலைமையகத்துக்கு முன்பாக உள்ள தனியார் வங்கி ஒன்றுக்கு உரித்தான தானியங்கி பண இயந்திரம் (ஏரிஎம்) மின் குமிழ் இல்லாது இருள் மயமாக காணப்படுகிறது.

இதனால் இரவுவேளைகளில் மக்கள் பணம் எடுப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர் என அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(ச-222)



## இன்றைய நாள்

**மேடம்:** உங்கள் துறையில் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள். பணியின் மீதான ஆர்வம் எதிர்பார்க்காத அளவில் சிறப்பாக இருக்கும்.

**இடபம்:** நெருங்கிய நண்பர்களின் போக்கு திகைப்பைக் கொடுக்கும். யோசித்துப் பக்குவமாகப் பேசி செல்வாக்கு உயரக் காண்பீர்கள். குழந்தை பாக்கியம் இல்லாதோருக்கு இனிக்கும் செய்தி வரும்.

**மிதுனம்:** வீட்டிலுள்ள பெரியவர் உடல்நலத்தில் முன்னேற்றம் ஏற்படும். சிக்கலான விடயத்துக்குத் தீர்வுகண்டு பாராட்டு பெறுவீர்கள். பணியிடத்தில் அன்பு நண்பர்களின் ஆதரவு உண்டு.

**கடகம்:** கடன் பற்றிய நிம்மதி அளிக்கும் செய்தி வந்து சேரும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் மற்றும் சிரிப்பு நிலவும். அலைச்சல் பற்றி குறைப்பட்டுக் கொள்ளாதீர்கள்.

**சிம்மம்:** பல நாள் செய்த முயற்சியில் ஒரு வழியாய் வெற்றி கிடைக்கும். பல காலம் நிம்மதியின்றி இருந்தவர்களுக்கு தூக்கம் வரும். வங்கியில் விண்ணப்பித்திருந்த கடன் பற்றிய நற்செய்தி வரும்.

**கன்னி:** பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வீர்கள். பணியிடத்தில் பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும் நாள். வெளிப்படையாகச் சொல்ல முடியாத விஷயங்கள் நிகழும்.

**துலாம்:** இன்று தேவையில்லாத விவகாரங்களில் ஈடுபட வேண்டாம். மனதில் ஏற்படும் சிறு வேதனைகளை சமாளிக்க வேண்டி வரும். வாக்குவாதத்தால் எந்த முடிவுக்கும் வர முடியாமல் திணறுவீர்கள்.

**விருச்சிகம்:** பல காலம் எதிர்பார்த்த சந்தோஷம் உங்களை வந்தடையும். கடந்த நாளில் பேச்சில் இருந்த சூடு குறைந்து மென்மை வரும். வெளியூர், வெளிநாட்டில் வேலை தேடியோருக்கு நற்செய்தி உண்டு.

**தனுசு:** ஆசைப்பட்டுக்கொண்டிருந்த விஷயம் ஒன்று நிறைவேறும் நாள். இன்று கூடுதலாக ஒரு புதிய வருமானத்துக்கு வழி ஏற்படும். மற்றவர்களின் ஒத்துழைப்பின்மையால் சங்கடம் ஏற்படலாம்.

**மகரம்:** யாரோ சொன்ன சிறு வார்த்தைக்கு மனம் உடைய வேண்டாம். உணர்ச்சிவசப்படக் கூடிய நிலை ஏற்பட்டு சமாளிப்பீர்கள். பணியிடத்தில் சிறு ஏமாற்றம் இருக்கும். புதுக்கலை கற்பீர்கள்.

**கும்பம்:** பலகாலம் கழித்து கலைத்துறையினருக்கு வாய்ப்பு வரும். திடீர் புகழ் திக்குமுக்காடச் செய்யும். மாற்றம் ஒன்று நிகழும். கோபம் குறையும். பணியிடத்தில் சிறுசிறு மாறுதல்கள் இருக்கும்.

**மீனம்:** மற்றவர்கள் துணையின்றி சொந்த முயற்சியில் சாதிப்பீர்கள். நகைச்சுவை உணர்ச்சி அதிகரிப்பதால் இறுக்கமான சூழல் மாறும். வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் அதிகரிக்கும்.

# கிழக்கு முனையத்தை விற்பதற்கு சுதந்திரக் கட்சி விரும்பவில்லை

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை வெளிநாடொன்றுக்கு வழங்குவது தொடர்பில் தாமோ அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பிலோ எவரும் விருப்பம் வெளியிடவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். களுத்துறை வாத்துவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (வ-இ)



## பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜன.25

புங்குடுதீவு முதலாம், இரண்டாம் மற்றும் ஐந்தாம் வட்டாரப் பகுதிகளில் வாழ்ந்து வரும், பொருண்மியம் நலிந்த குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள், கிருமிநாசினி பொருள்கள் மற்றும் உலருணவுப் பொருள்கள் என்பவை வழங்கப்பட்டுள்ளன.

புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த, பாண்டியன்குளம் கிராம அலுவலரான அமரர் நா. பாக்கியநாதனின் நினைவாக, அவரது புதல்வியார் குகதர்சினி (கனடா)யின் அனுசரணையில் இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வேலணை பிரதேச சபை உறுப்பினரும் , இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஊர்காவற்றுறைத் தொகுதிச் செயலாளருமாகிய கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில், தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்களான கருணாகரன் குணாளன், அமிர்தபாலன் (சந்திரன்), புவனேந்திரன், தர்சிகன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப)

## வில்பத்து காடழிப்பால் 1000 மில்லியன் நட்டம்!

கொழும்பு, ஜன.25

வில்பத்து காடழிப்புத் தொடர்பில் ஆயிரம் மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக நட்டமேற்பட்டுள்ளமை மதிப்பீட்டில் தெரியவந்துள்ளது என வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குற்றவாளியாக நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனுக்கு இது தொடர்பில் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் எழுத்து மூலம் அறிவித்துள்ளது. ஹிரு சீ.ஐ.ஏ. நிகழ்ச்சியினூடாக முதன் முதலில் அறிவிக்கப்பட்ட நாட்டின் சர்ச்சையை ஏற்படுத்திய வில்பத்து சரணாலயத்தின் அருகில் அமைந்துள்ள கல்லாறு வனப்பகுதியில் 2 ஆயிரத்து 388 ஏக்கர் நிலப்பரப்பில் சட்டவிரோதமான குடியேற்றங்களால் சுற்றாடல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என சுற்றுச் சூழல் நீதிமையத்தால் 2015ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்ற தீர்ப்புக்கமைய அந்த நட்டஈட்டுத் தொகையை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும் என்று வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் ரிஷாத் பதியுதீனுக்கு அறிவித்துள்ளது. (வ-இ)

## உழவு இயந்திரத்தில் சிக்கி குழந்தை உயிரிழப்பு

கொழும்பு, ஜன. 25

மொரகொட, மஹதிவுல்வெவ பகுதியில் உழவு இயந்திரத்தில் சிக்கி குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

உழவு இயந்திரத்தின் பின்னால் தாயும் குறித்த குழந்தையும் அமர்ந்து பயணித்துள்ளனர். அப்போது திடீரென தாயின் கை தவறி குழந்தை கீழே விழுந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உழவு இயந்திரத்தில் சிக்கிய குழந்தை பலத்த காயங்களுக்கு உள்ளாகி யக்கல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும், அது உயிரிழந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

9 மாதங்களேயான நாமல்புரப் பகுதியைச் சேர்ந்த குழந்தையே உயிரிழந்துள்ளது. சம்பவம் தொடர்பில் உழவுஇயந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ரி5-இ)

## ஐ.ம.சவின் உறுப்பினர்கள் விவரம் அடுத்த வாரம்

ஐக்கிய மக்கள் சக்தியின் 2021 ஆம் ஆண்டுக்கான புதிய உறுப்பினர்கள் குறித்த அறிவிப்பு அடுத்த வாரம் வெளியிடப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக கட்சியின் செயற்குழு திங்கட்கிழமை கூடி உறுப்பினர்கள் தொடர்பாக முடிவு செய்யும் என்று தெரிவித்தார்.

இதேவேளை கட்சியின் புதிய அரசியலமைப்புக்கு இணங்க புதிய பதவிகளுக்கு யார் நியமிக்கப்பட வேண்டும் என்பது குறித்து செயற்குழு முடிவுசெய்யும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி5-இ)

## வாகனப் பரிசோதனை நிகழ்வு



கொழும்பு, ஜன.25

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய வருடாந்த வாகனப் பரிசோதனை நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய வருடாந்த வாகனப் பரிசோதனை நிகழ்வு யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரணவில் கலந்துகொண்டார். தற்போதைய கொரோனா நிலைமையைக் கருத்தில் கொண்டு ஒன்றுகூடல்களைத் தவிர்த்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ப-20)

# சுகாதாரப் பழக்க வழக்கங்கள் இரு வருடங்களுக்கு கட்டாயம்

## மருத்துவர் யமுனாநந்தா அறிவுரை

**யாழ்ப்பாணம், ஜன.25**



**சுகாதாரப் பழக்கங்களே கொவிட்டை உலகில் இருந்து அகற்றும். அதற்காக இன்னும் இரண்டு வருடங்கள் சுகநல வழிகளில் கவனமாக இருத்தல் வேண்டும் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

தற்போது உலகில் கொவிட் 19 வைரஸ் பரம்பலில் மூன்று வகையான விகாரமடைந்த வைரஸ்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. புதிதாக மாற்றமடையும் வேகம் குறைவாகக் காணப்பட்டாலும் அவ்வாறு உருமாறிய கொவிட் கிருமியால் ஏற்படும் பாதிப்புக்கள் தற்போது மீளவும் உலகை அச்சுறுத்தி உள்ளன. பிரித்தானியாவில் உருமாறிய கொவிட் வைரஸின் பரவல் தற்போது உலகில் 55 நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இதனால் ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்த மீளவும் ஆரம்பத்தில் இருந்து முயற்சி எடுக்க வேண்டிய அவலநிலை ஏற்படும். பயணக் கட்டுப்பாடுகள், சமூக இடைவெளி பேணல், தனிமைப்படுத்தல், முகக்கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற சுகநல எச்சரிக்கைக் காப்புக்களைக் கட்டாயம் கடைப்பிடித்தல் அவசியம். ஏனெனில் சீனாவில் இருந்து பரவிய வைரஸ் இன்று உலகின் எந்த மூலையில் இருந்தும் விகாரமடைந்து பரவலாம். அதற்குரிய தடுப்பு மருந்து தயாரிப்பதற்கு முன்பே மீண்டும் அவை பெரும் அழிவை ஏற்படுத்தலாம் - என்றார். (ப)

# ரஞ்சனை விடுவிக்க டயானா களத்தில்!

கொழும்பு, ஜன.25



நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்கான முயற்சிகளை நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தலையிட்டு மேற்கொண்டு வருகின்றார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அண்மையில் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்ட ஊவ தென்னே சுமன தேரர் டயானா கமகே தனக்கு ஜனாதிபதியிடம் பொது மன்னிப்பைப் பெற்றுத் தந்தார் என பகிரங்கமாக தெரிவித்துள்ளார். ரஞ்சன் ராமநாயக்க மற்றும் டயானா கமகே இருவரும் நெருங்கிய நண்பர்கள் எனவும், இருவரும் கடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சத்தியின் சார்பில் ஒன்றாக பணியாற்றினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-இ)

# மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தில் வழிபாடு

கொழும்பு, ஜன.25

இலங்கையில் வாழும் மக்களும், உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக விசேட பூசை வழிபாடுகள் யாழ்ப்பாணம் மருதனார்மடம் ஸ்ரீ அருள்வளர் சுந்தர ஆஞ்சநேயர் கோவிலில் இன்று இடம்பெறவுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காலை 6.30 மணிக்கு இடம்பெறும் இந்த விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் கோவிலின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இ. சுந்தரேஸ்வரக்குருக்களின் அருளாசி உரையும், வேதபாராணமும் இடம்பெறவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)



# கடற்படையின் வாகனம் விபத்தில் சிக்கிச் சேதம்

முல்லைத்தீவு, ஜன.25

முல்லைத்தீவு மாங்குளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் கடற்படையின் "கப்" ரக வாகனம் சேதமடைந்தது.

மாங்குளம் விகாரைக்கு முன்னால் ஏ-9 வீதியில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது. கடற்படையின் கப் ரக வாகனமும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெற்றோல் வாகனமும் மோதியே இந்த விபத்து நடந்துள்ளது. இந்த விபத்துத் தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-ரி2)

# அருட்தந்தையர்கள் 9 பேருக்குத் தொற்று!

கொழும்பு, ஜன.25



மட்டக்குளி பிரதேசத்திலுள்ள தேவாலயத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 9 அருட்தந்தையர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபையின் பிரதான சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் ருவன் விஜேமுனி இது தொடர்பில் தெரிவித்ததாவது

இந்த தேவாலயத்துக்கு அருகில் மேலும் 50க்கும் அதிகமான அருட்தந்தையர்கள் வசித்து வருகின்றனர். அவர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

தற்போதுள்ள நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, மக்கள் நடமாட்டம் அதிகமான பகுதிகளுக்கு செல்லும் போது அவதானமாக இருக்க வேண்டும்- என்றார். (ற-இ)

# கடத்தல் குற்றச்சாட்டில் இருவர் கைது

இந்தியாவில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்த இலங்கையைச் சேர்ந்த இரண்டு நபர்கள் அந்த நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தங்கள் அடையாளத்தை மறைத்து, கடவுச்சீட்டு இல்லாமல் பல ஆண்டுகளாக சென்னையில் வசித்துள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் தமிழகம், தூத்துக்குடி அருகே இலங்கை படகொன்றில் இருந்து 100 கிலோ கிராம் ஹெரோய்ன், 18 கிலோ மெத்தபெட்டமைன் மற்றும் துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டிருந்தன. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் இந்தக் கைது நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ரி5-இ)

# கொரோனாத் தடுப்பூசி அரசுக்கு சவாலில்லை!



## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.25

இலங்கை 50 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டில் ஒரு பயனுள்ள தேசிய நோய்த்தடுப்புக் கொள்கையைக் கொண்டுள்ளது. பொதுமக்களுக்கு கொரோனாத் தடுப்பூசிகளை வழங்குவது அரசாங்கத்துக்கு சவாலாக இருக்காது.

இவ்வாறு முதன்மை சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் கடந்த காலங்களில் குழந்தைகளுக்கான தடுப்பூசித் திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இலங்கை மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்க அரசு ஏற்பாடு செய்து வருகின்றது.

மக்கள் தொகையில் 50 முதல் 55 வீதமானோருக்கு தடுப்பூசி வழங்குவதற்கான திட்டங்கள் நடந்து வருகின்றன. இதில் 20 சதவீதம் இலவசமாக வழங்கப்படவுள்ளது- என்றார். (ய-இ)

# போக்குவரத்து வசதிகளின்றி அல்லலுறும் மாணவர்கள்

கிளிநொச்சி, ஜன.25

வட்டக்கச்சி மாயவனூர் பகுதியில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுவந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை இவ்வருடம் பாடசாலை ஆரம்பத்திலிருந்து இதுவரை நடைபெறவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதனால் பஸ் சேவையை நம்பியிருக்கும் அந்தப் பகுதி மாணவர்கள் சுமார் 5 கிலோமீற்றர் தூரம், நடந்தே பாடசாலைக்குச் செல்லவேண்டிய நிலை உள்ளது என்று பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

வட்டக்கச்சிப் பகுதியில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள மாயவனூர் கிராமத்திலிருந்து கல்வி கற்பதற்காக 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் வட்டக்கச்சி மகாவித்தியாலயத்துக்குச் சென்று வரும் நிலையில் கடந்த காலங்களில் பஸ் சேவை நடைபெறாததால் மாணவர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கினர்.

பலரது கோரிக்கைகளை அடுத்து 2016 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துக்காக இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவையில் ஈடுபட்டது.

கடந்த வருடம் கொரோனா முடக்கத்தைத் தொடர்ந்து பாடசாலைகளும் முடங்கிருந்தன. நீண்ட விடுமுறையின் பின் அண்மையில் பாடசாலைகள் தொடங்கியுள்ளன. ஆனால் இதுவரை மாணவர்களுக்கான பஸ் சேவை நடைபெறவில்லை. இதுதொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-ரி)

## இருட்டுமடுவில் கலந்துரையாடல்

புதுக்குடியிருப்பு, ஜன.25

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட இருட்டுமடுக் கிராமத்தின் இளைஞர் கழக உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இருட்டுமடு கிராம அலுவலர் தலைமையில் அவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் இளைஞர் கழகங்களின் உத்தியோகத்தர், என்.சி. எம் லங்கா தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் உத்தியோகத்தர், இருட்டுமடு இளைஞர் கழகத்தின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த பிரதேச செயலக உத்தியோகத்தர் "தற்போதைய சூழ்நிலையில் சமுதாயத்தில் இளைஞர்களின் முன்னுதாரணமான செயற்பாடுகளே அடுத்த கட்டத்திலுள்ள இளையோரை வழி நடத்துகின்றன" - என்றார். (ப-ரி)

## வலப்பனை நிலநடுக்கம் விசேட குழு ஆராய்வு!

கொழும்பு, ஜன.25

வலப்பனைப் பிரதேசத்தில் பதிவான நிலநடுக்கம் தொடர்பில் ஆராய்வதற்கு விசேட விசாரணைக் குழுவொன்று அந்தப் பகுதிக்கு சென்றுள்ளது என்று புவிச்சரிதவியல் மற்றும் சுங்கப் பணியகத்தின் தலைவர் அனுர வல்பொல தெரிவித்தார்.

முதற்கட்ட விசாரணையில், தற்போதுள்ள தகவலின்படி இந்த நிலநடுக்கம் இயற்கையாகவே இடம்பெற்றது என உறுதியாகக் கூற முடியும் எனவும் தெரிவித்தார். (ம-இ)

## பெண் தலைமைத்துவ குடும்பத்துக்கு வீடு அமைப்பதற்காக அடிக்கல்!

முல்லைத்தீவு, ஜன.25

முல்லைத்தீவு முத்தையன்கட்டு ஜீவ நகர் கிராமத்தில் பொருண்மியம் நலிந்த பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு வீடு அமைப்பதற்காக அடிக்கல் நடப்பட்டுள்ளது.

ஓம் சரவணபவா சேவா அறக்கட்டளை நிலையத்தால் அடிக்கல் நடப்பட்டது.

நிறுவனத்தின் இணைப்பாளரும் ஆசிரியருமான து.சுதர்சன், தொழிலதிபர் கீர்த்தி மற்றும் அந்தப் பகுதி கிராம அலுவலர் உள்ளிட்ட பலர் இந்த அடிக்கல் நடும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-21)

## அநுரவை ஊழல்வாதியென முடியுமானால் நிரூபியுங்கள்

### பிமல் ரத்நாயக்க சவால்

கொழும்பு, ஜன.25



அநுரகுமார திஸாநாயக்கவை ஒரு ஊழல்வாதி என்று நீதிமன்றில் முடிந்தால் நிரூபித்துக் காட்டுங்கள் என்று ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க சவால் விடுத்துள்ளார்.

தலவாக்கலை நகரில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருந்த ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் ஊடாக அநுரகுமார திஸாநாயக்கவும் தவறு செய்துள்ளார் என ஒரு கதையை கட்ட விழ்த்துவிட்டுள்ளனர்.

ஜனாதிபதியால் நியமிக்கப்படும் குழுக் களால் தண்டனை வழங்க முடியாது. நீதிமன்றத்தால்தான் தண்டனை வழங்க முடியும்.

முடிந்தால் நீதிமன்றில் குற்றவாளியாக்கி அநுரகுமாரை சிறையில் அடைத்துக்காட்டுங்கள். மக்களின் பணத்தில் ஒரு சதத்தைக்கூட கொள்ளையடிக்காதவர். ஊழல் எதிர்ப்பு குழுவில் அநுரகுமார திஸாநாயக்கவால் செய்யப்பட்ட ஒருவிடயத்தை நிரூபித்துக்காட்டுங்கள் - என்றார். (ம-இ)

## மேய்ச்சல்! தரவை இன்றி முல்லையில் மாடுகள் சாவு

முல்லைத்தீவு, ஜன.25

மேய்ச்சல் தரவை இல்லாததால் நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் உயிரிழந்துள்ளன. இதனால் கால்நடை வளர்ப்பைக் கைவிட வேண்டிய நிலைமைக்கு பண்ணையாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

வன்னி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளை அடையாளப்படுத்த வேண்டும் என்று உரிய அதிகாரிகளிடம், கல்நடை வளர்ப்பாளர்கள் பலமுறை கோரிக்கை விடுத்திருந்தனர். ஆனால் இதுவரை மேய்ச்சல் தரவை அடையாளப்படுத்தப்படவில்லை.

கடந்த ஆண்டு காலபோக நெற்செய்கையை அடுத்து. கால்நடைகளின் மேய்ச்சல் கட்டுப்படுத்தப்பட்டது. அதன்பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்குத்தொடுவாய், குமுழமுனை, முத்துஐயன்கட்டு, ஒட்டுசுட்டான், பாண்டியன்குளம் நட்டாங்கண்டல் ஒட்டங்குளம் போன்ற பல பிரதேசங்களில் கால்நடைகளின் உணவுக்குக் கடும் தட்டுப்பாடு காணப்படுகின்றது. உணவுப் பற்றாக் குறை காரணமாக நூற்றுக்கணக்கான கால்நடைகள் இறந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குத்தொடுவாயில் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட வடக்கன் மாடுகளை வளர்க்கும் பண்ணையாளர் ஒருவரின் பட்டியில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட கால்நடைகளும் இவ்வாறு உயிரிழுந்துள்ளன என்று கூறப்படுகின்றது. மேய்ச்சல் தரவையை விரைந்து அடையாளப்படுத்தாவிட்டால் மாவட்டத்தில் நாட்டு மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வளர்ப்போர் சிக்கலை எதிர்கொள்ள நேரிடும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ப-ரி)

## தமிழர்களின் அரசியல் போராட்டம் தொடரும்!

### பிள்ளையான் கூறுகின்றார்

மட்டக்களப்பு, ஜன.25

இலங்கையில் தமிழ் சமூகம் வாழும் வரை அரசியல் போராட்டம் தொடரும். இதேவேளை அபிவிருத்தியையும் சமமாகக் கொண்டு செல்ல வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

எதிர்வரும் காலங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் தமிழ் மக்களுக்கும் ஒரு மாற்றம் ஏற்படும். நடைபெறவுள்ள கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலே எமது கட்சியானது ஆளும் தரப்பிலேயே இருக்கும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன.

நமது பாரம்பரியத்தை, நமது மூதாதையர்களது எண்ணக் கருவை நிறைவேற்றுவதற்காக நாம் கல்வித்துறையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவோம். இந்தக் காலப்பகுதி வரும்போது அரசியலும் நிர்வாகமும் மக்களும் ஒன்றித்து பயணிக்க முடியும். இப்போதும் நாங்கள் ஆளும் தரப்பிலேயே இருக்கின்றோம். அந்த அடிப்படையில்கூட இந்த மண்ணுக்கு செய்யக்கூடிய அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முன்னெடுக்க நாம் தயாராக இருக்கின்றோம் -என்றார். (வ-இ)

## நாய்களுக்கும் வைரஸ்!

கொழும்பு, ஜன. 25

நாட்டில் பல இடங்களிலும் நாய்களுக்கு இனந் தெரியாத வைரஸ் பரவி வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இனங்காணப்படாத இந்த வைரஸால் இதுவரை நாட்டின் பல இடங்களிலும் வளர்ப்பு நாய்கள் உயிரிழந்துள்ளன என்று கால்நடை மருத்துவர் சுகத் பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியான வயிற்றோட்டம், இரத்த வாந்தி போன்ற அறிகுறிகள் நாய்களுக்கு ஏற்பட்டு பின்னர் உயிரிழப்புவரை அது தொடர்கின்றது என அவர் தெரிவித்தார். (ரி5-இ)

# கடனுதவி, காப்புறுதி தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வு!

## பிரதேச செயலகங்கள் ஊடாக முன்னெடுக்கத் திட்டம்

**யாழ்ப்பாணம், ஜன. 25**

**விவசாயிகளுக்கான கடனுதவிகள் அவர்களுக்கு உரிய முறையில் சென்றடைவதில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதை அடுத்து, விவசாயிகளுக்கான கடனுதவி, காப்புறுதி தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையை பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

யாழ் மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலர் க.மகேசனின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும், குழந்தைகளுக்கான மரத்தோட்டம் எனும் தொனிப் பொருளில் யாழ். மாவட்டத்தின் அனைத்துப் பாடசாலைகளிலும் முதலாம் தரத்தில் கல்விகற்றும் சகல மாணவர்களுக்கும் மா, தோடை போன்ற ஒட்டுக்கன்றுகள் அல்லது தேசி, மாதுளை, பலா போன்ற ஒட்டாக் கன்றுகளில் ஒன்றை வழங்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளரின் தலைமையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், யாழ் விவசாயிகள் விதைகளைக் கொள்வனவு செய்வதற்கு யாழில் உரிய இடம் இல்லை எனவும் கிளிநொச்சி விதை உற்பத்தி நிலையத்துக்குச் சென்றே விதைகளைக் கொள்வனவு செய்யும் சூழ்நிலை காணப்படுகிறது. இதற்கு யாழிலேயே உரிய இடத்தை ஒழுங்குபடுத்தித் தருமாறும் விவசாயிகள் சார்பாகக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அத்தோடு, மழை காரணமாக நெற்பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குதல், நீர்ப்பாசனத்துறையின் விருத்தி, வயல்களில் தேங்கும் அதிகளவான மழைநீரை உரிய முறையில் அகற்றல், வெள்ளம் அதிகரிக்கும்போது உரிய முறையில் வான்கதவுகளைத் திறத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தில் யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர், கமநல சேவைகள் திணைக்களப் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயத்துறை சார் திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-6)

### கல்வியங்காடு பொதுச்சந்தை

# தரிப்பிடம் இல்லாது மக்கள் அவதிநிலை

யாழ்ப்பாணம், ஜன. 25

கல்வியங்காடு பொதுச்சந்தையின் புதியகட்டடம் திறந்து வைக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும் வாகனத் தரிப்பிடத்துக்கான வசதி செய்யப்படவில்லை. இதனால் தாம் வீதிகளிலேயே வாகனங்களை நிறுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம் என்று அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன் வீதிகளில் நிறுத்தப்படும் வாகனங்களுக்கு வாகனப் பாதுகாப்பு கட்டணம் வசூலிக்கப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் கல்வியங்காட்டு பொதுச்சந்தையின் குத்தகையாளர் கருத்துத் தெரிவித்ததாவது:

நாங்கள் சந்தையை இந்தமாதம் முதல் ஒருவருட குத்தகைக்கு எடுத்துள்ளோம். கடந்த வருடம் தொடக்கம் இதுவரை இங்கே வாகனத்தரிப்பிடம் குறித்த இடத்தில் ஒதுக்கப்படாததால் சந்தையின் வெளிவட்ட வீதியில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்படுகின்றன. மாநகர சபையுடனான ஒப்பந்தத்தின் படி நாங்கள் மாநகர சபையால் நிர்ணயிக்கப்பட்ட வாகன வரித்தொகையை அறவிடுகின்றோம்.

ஆயினும் வீதிகளில் வாகனங்களை நிறுத்துவதால் மக்கள் அசௌகரியங்களைச் சந்திக்கின்றனர் என்று எமக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் யாழ் மாநகரசபை நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம். அவர்கள் அடுத்த மாதமளவில் பொதுச்சந்தையின் உட்புறத்தில் வாகனத் தரிப்பிடம் அமைத்துத் தரப்படும் என்று தெரிவித்துள்ளனர் - என்றார். (ம-ரி1)

# நந்திக்கடலில் அகற்றப்படும் சட்டவிரோத இறால் கூடுகள்

முல்லைத்தீவு, ஜன.25

முல்லைத்தீவு நந்திக்கடலில் காணப்படும் சட்டவிரோத வலைகளை அகற்றும் நடவடிக்கையில் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள், மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம் மற்றும் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

நந்திக்கடலில் தற்போது இறாலின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றது. சட்டவிரோத கூட்டு வலையைப் பயன்படுத்தி மீனவர்கள் இறால் பிடிப்பதில் ஈடுபடுவதால், வளர்ச்சி முழுமை பெறாத நிலையில் இறால் குஞ்சுகளும் அதில் அகப்படுகின்றன. இதனால் வீச்சுவலைகளைப் பயன்படுத்தி தொழில் செய்யும் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், நேற்றுமுன்தினம் சங்கங்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் இணைந்து நந்திக்கடலில் உள்ள சட்டவிரோத இறால் கூடுகளைஅகற்றியுள்ளார்கள். தொடர்ச்சியாக இவ்வாறான நடவடிக்கை இடம்பெறும் என்றும் இதற்கு நன்னீர் மீனவ சங்கங்கள் அனைத்தும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் நிக்ஸ்சன் தெரிவித்துள்ளார். (ப-19)



# தரம் 6 இல் இணைக்கும் நடைமுறைகள் மாறாது

கொழும்பு, ஜன.25

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளுக்கமைய, பாடசாலைகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடைமுறையில் எந்தவித மாற்றமும் இல்லை என கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்தார்.

மாணவர்களை பாடசாலைகளில் இணைப்பதில் பாரபட்சம் எனத் தெரிவித்து கல்வி அமைச்சுக்கு முன்பாக கடந்த வாரம் பெற்றோர் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர். எனினும் குறித்த விடயம் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என அவர் தெரிவித்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாணவர்களுக்கு அநீதி இழைக்க இடமளிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ரி5-இ)



அண்மையில் பெய்த கனமழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஒட்டுசுட்டான் கெருடமடுப் பகுதியில் வடிகான் உடைந்து சேதமாகியுள்ளது. அதனால் அந்த வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. (ப-ரி1)

# தம்மிக்கவின் பாணியை ஏற்றுக்கொள்ள முடியாது

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.25

கேகாலை தம்மிக்கவால் தயாரிக்கப்பட்ட ஆயுள்வேதப் பாணி ஆய்வு மூலம் அங்கீகரிக்கப்படாமல் மக்களுக்கு பகிர்ந்தளிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்தார். கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கேகாலையிலுள்ள தம்மிக்க என்ற நபர் மற்றும் பிறிதொரு மருத்துவர் தயாரித்த மருந்துகள் இரகசியமான முறையிலும், சந்தைகளிலும் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளை அனுமதிக்க முடியாது. கேகாலை மாவட்டச் செயலர் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும். முடிவுகள் எவ்வாறு கிடைக்கும் என்பது தொடர்பில் எமக்குத் தெரியாது. குறைந்தபட்சம் பரிசோதனைகள் எந்தளவுக்கு அடுத்தகட்டத்துக்கு செல்லும் என்பதும் தெரியாது. சுகாதார அமைச்சில் நடைபெற்ற தொழில்நுட்பக் குழு கூட்டத்தின்போது கூட நாம் இவ்விடயம் தொடர்பில் வினவியபோது யாரும் அதற்கு பதிலளிக்கவில்லை. ஆய்வுக்குழு இடைக்கால அறிக்கையைக் கூட இது வரையில் சமர்ப்பிக்கவில்லை. ஆனால் ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் நிறைவடைந்துள்ளன. ஆய்வு முடிவுகள் ஏன் தாமதமாகின்றன என்ற விடயமும் எமக்குத் தெரியாது. இந்தப்பாணியை மருந்தாக அங்கீகரிக்காமல் பகிர்ந்தளிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்- என்றார். வ-இ)



### ரூட் அபார ஆட்டம்


# இலங்கை ஆதிக்கம் செலுத்த வாய்ப்புகள்

காலி, ஜன. 25
இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் ரூட் அபாரமாக விளையாடி 186 ஓட்டங்களைக் குவித்தார். எனினும் இலங்கை அணி ஆதிக்கம் செலுத்தக் கூடிய வகையிலேயே இதுவரையான நிலவரம் உள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து இலக்குகளையும் இழந்து 381 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக மத்தியூஸ் 110 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அண்டர்சன் 6 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி நேற்று முன்தின இரண்டாம் நாள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. பேர்ஸ்ரௌவ் 24 ஓட்டங்களுடனும், ரூட் 67 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பேர்ஸ்ரௌவ். பட்லர் நிதானமாக விளையாடினார். ரூட் மறுமுனையில் சதம் கடந்தார். பட்லர் அரைச்சதம் கடந்தார். 55 ஓட்டங்களுடன் பட்லர் ஆட்டமிழந்தார்.

பின்வரிசையில் பெஸ் 32 ஓட்டங்களைப் பெற்றார். ரூட் 186 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ரண்அவுட் ஆனார். இங்கிலாந்து அணி 9 இலக்குகளை இழந்து 339 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நாள் முடிவுக்கு வந்தது. (ம)




### 6 ஆண்டுகள் காத்திருப்பு

# மக்ரேகரை பழிதீர்த்தார் அமெரிக்க வீரர் டஸ்ரின்



வொஷிங்டன், ஜன. 25
அயர்லாந்து வீரர் மக்ரேகர் அமெரிக்க வீரர் டஸ்ரின் இருவருக்கும் இடையில் நேற்று நடைபெற்ற குத்துச் சண்டைப் போட்டியில் டஸ்ரின் அபார வெற்றி பெற்றார்.

இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 10.45 மணியளவில் இந்தப் போட்டி இடம்பெற்றது. முதல் சுற்றில் மக்ரேகர் ஆதிக்கம் செலுத்தினார். இரண்டாவது சுற்றின் 2.32 ஆவது நிமிடத்தில் டஸ்ரினின் 'பஞ்ச்' ஒன்று மக்ரேகரின் கழுத்தைப் பதம் பார்த்தது.

இதையடுத்து மக்ரேகர் நிலை தடுமாறினார். இதைத் தொடர்ந்து மக்ரேகரை மீண்டெழ விடாது ஆதிக்கம் செலுத்திய டஸ்ரின் வெற்றி பெற்றார்.

2014ஆம் ஆண்டு இருவருக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் முதல் சுற்றில் வைத்து மக்ரேகர் வெற்றி பெற்றார். இதற்குப் பதிலடியாக டஸ்ரின் பொரியரின் வெற்றி அமைந்தது. (ம)


அரியாலை கில்லாடிகள்


சுழிபுரம் வைக்கின்ஸ்

# ஜி.பி.சி.எல் கிண்ணத் தொடர் வியாழனன்று ஆரம்பமாகிறது


வடமராட்சி வேங்கை

யாழ்ப்பாணம், ஜன. 25
ஞானம்ஸ் பெயின்ற் நிறுவனத்தின் அனுசரணையில் நடத்தப்படும் ஜி.பி.சி.எல் கிண்ணத்துக்கான இந்தவருடத் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இந்தத் தொடரில் 10 அணிகள் கலந்து கொள்ளவுள்ளன. ஏ, பி என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு தொடர் நடத்தப்படவுள்ளது. ஏ பிரிவில் சுண்டுக்குளி ஈகிள்ஸ், அரியாலை கில்லாடிகள் 100, ஜப்னா றோயல்ஸ், சுழிபுரம் வைக்கின்ஸ், வடமராட்சி வேங்கை அணிகள் இடம்பெற்றுள்ளன. நாளையதினம் பி பிரிவு அணிகளின் விபரங்கள் வெளியாகும். (ம)


சுண்டுக்குளி ஈகிள்ஸ்


ஜப்னா றோயல்ஸ்

# காலை உணவு இன்மையால் மயங்கி விழும் மாணவர்கள்

**கிளிநொச்சி, ஜன.25**
**கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைகளில் மாணவர்கள் மயங்கி விழுகின்ற சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. பாடசாலைகளில் மாணவர்கள் மயங்கி விழுகின்றமைக்கு காலை உணவு அருந்தாது பாடசாலைக்கு செல்கின்றமையே பிரதான காரணம் எனத் தெரிய வருகின்றது.**

மயங்கி விழும் மாணவர்களை மருத்துவமனைகளுக்கு கொண்டு சென்றால் காலையில் உணவு அருந்தாமல் பாடசாலைக்கு சென்றார் என்ற பதிலே அதிகம் தெரிவிக்கப்படும்.

பெற்றோர் அதிகாலையில் எழுந்து வேலைகளுக்குச் செல்வதால் பிள்ளைகளின் உணவுத் தேவைகள் சரிவரப் பூர்த்தி செய்யப்படாமை, குடும்ப வறுமை, பாடசாலைகளுக்கு தாமதமாக வருகின்ற மாணவர்கள் மைதானத்தில் ஓடுதல், சிறு சிரமதானப் பணிகளில் ஈடுபடுதல் என்பனவும் மாணவர்கள் மயங்கி விழுவதற்கு காரணமாக அமைகின்றன.

மாணவர்களின் காலை உணவை முதன்மைப்படுத்துமாறு மருத்துவர்களால் பெற்றோருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

சிவில் பாதுகாப்புத் திணைக்களம், மிதிவெடி அகற்றும் நிறுவனங்கள், ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் பெற்றோரின் பிள்ளைகள் கூடுதலாக காலை உணவை அருந்துவதில்லை என்று பாடசாலையிலும் மருத்துவமனையிலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (வ-ரி2)



## ஜனநாயக விரோதத்தை கண்டித்துப் போராட்டம்!

கொழும்பு, ஜன.25
அரசாங்கத்தின் ஜனநாயக விரோதச் செயற்பாடுகளைக் கண்டித்து ஐக்கிய மக்கள் சக்தி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டது.

'பேச்சு சுதந்திரத்தை பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் கினிகத்தேனை நகரில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் மஸ்கெலியா தொகுதி அமைப்பாளர் கபில நாகன்தல ஏற்பாடு செய்திருந்தார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்ணான்டோவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் வெளியிடப்பட்ட கருத்துக்கு இதன்போது கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நீதி கிடைக்கவேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.(ற-இ)

## பவித்ராவுடன் தொடர்புபட்டோரை அடையாளம் காணும் நடவடிக்கை!

கொழும்பு, ஜன.25
சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவருடன் தொடர்பிலிருந்தவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகளில் சுகாதார அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

அமைச்சர் தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றப்பட்டுள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் சுகாதார அமைச்சு வளாகம் மூடப்பட்டு, பணியாளர்கள் சுய தனிமைப்படுத்தலை முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சுடன் தொடர்புபட்ட பொது சுகாதார பரிசோதகர்களிடம் கடந்த ஒரு வாரத்தில் அமைச்சர்களுடன் தொடர்பிலிருந்தவர்களின் பெயர்ப்பட்டியல் வழங்கப்பட்டுள்ளது என பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல்ரோண தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் சுகாதார அமைச்சில் இடம்பெற்ற உயர்மட்ட சந்திப்புகளில் அமைச்சர் கலந்துகொண்டுள்ளார். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் பசில் ராஜபக்ச உட்பட முக்கிய தலைவர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலும் அவர் கலந்துகொண்டுள்ளார். இதைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அலுவலகம் நேற்று முன்தினம் மூடப்பட்டு கிருமி நீக்கப் பணிகள் இடம்பெற்றன. (வ-இ)

## ஊஞ்சலில் சிக்குண்டு சிறுவன் உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜன.25
மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகிழடித்தீவுப் பகுதியில் ஊஞ்சலில் சிக்குண்டு சிறுவன் ஒருவன் நேற்று உயிரிழந்துள்ளான்.

மகிழடித்தீவு கட்டுப்பத்தைப் பகுதியைச் சேர்ந்த மனோகரன் கேதீசன் என்னும் எட்டு வயதுச் சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

பாடசாலை விடுமுறை நாளான நேற்று, வீட்டின் அருகிலுள்ள மாமரத்தில் தாயாரின் சேலையொன்றில் ஊஞ்சல் அமைத்து விளையாடுவதற்கு முற்பட்ட வேளை சேலையில் சிக்குண்டு உயிரிழந்துள்ளான்.

இந்த சிறுவனின் தாயார், மாடுகளை மேய்ப்பதற்காக வெளியில் சென்றுவிட்டு வீட்டுக்கு வந்த வேளை, மகனைக் காணவில்லை என்று தேடிய போது, சேலை யில் சிக்குண்ட நிலையில், சிறுவன் காணப்பட்டான்.

உடனடியாக சிறுவன் மீட்கப்பட்டு மகிழடித்தீவு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும் சிறுவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டான் என்று மருத்துவமனையின் கடமை மருத்துவர் தெரிவித்துள்ளார். சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன் மேலதிக விசாரணை களைக் கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற-இ)

## பொலிஸ் எனத் தெரிவித்து வியாபாரியிடம் கொள்ளை

கச்சாய், ஜன.25
பொலிஸார் எனக் கூறி மீன் வியாபாரி ஒருவரை வழி மறுத்த இளைஞர்கள் நால்வர், வியாபாரியைத் தாக்கி பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கேரதீவு வீதி, ஆலடிச் சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கச்சாய் சந்தை நோக்கி ஏ-35 வீதியூடாக சைக்கிளில் பயணித்த மீன் வியாபாரியை முச்சக்கர வண்டி ஒன்றில் யில் வந்த நான்கு இளைஞர்கள் வழிமறித்து நாங்கள் பொலிஸார் கஞ்சா கடத்தப்படுகின்றது என்று தகவல் கிடைத்தது என்று கூறி சோதனை மேற்கொண்டனர்.

வழி மறித்தவர்களிடம் பொலிஸ் அடையாள அட்டையை காட்டுமாறு மீன் வியாபாரி கேட்டதையடுத்து அவரை சரமாரியாக தாக்கி பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். (ஐ)

# புராதன இந்துக்களின் இடங்களை வழிபாடு செய்ய அனுமதியுங்கள்!

### சிவசேனை அமைப்பு கோரிக்கை

வவுனியா, ஜன.25
புராதன இந்து இடங்களில் வழிபாடு செய்வதற்கு ஜனாதிபதி மற்றும் பிரதமர் அனுமதி தர வேண்டும் என்று சிவசேனை அமைப்பின் வன்னி மாவட்டத் தலைவர் அ. மாதவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா நொச்சிமோட்டையில் அமைந்துள்ள அபிராமி அம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: தற்போது தொல்லியல் திணைக்களம் புராதன இடங்களுக்குச் சென்று அங்கு பூசை வழிபாடுகளை செய்வதற்கு தடைவிதித்து வருகின்றது. நாங்கள் வெறுமனவே ஆலயங்களை மட்டும் வழிபட்டு வராமல் இங்குள்ள புராதன இடயங்களையும் வழிபட்டு வருகின்றோம். வடக்கு மாகாணத்தில் உள்ள குறிப்பாக புராதன இடமான வெடுக்கு நாரி மலையில் உள்ள ஆதிலிங்கேஸ்வரர் ஆலய பூசகரின் கைது மிகவும் கண்டிக்கத்தக்கது.

தொல்லியல் திணைக்களமானது கொடுப்பனவை பெற்றுக் கொண்டு செயற்படுகின்றது. ஆனால் நாங்கள் மண்ணையும், மரத்தையும் வழிபட்டு வருவதோடு குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமாக வழிபட்டு வருவதன் மூலமாக நாங்கள் எந்தவித கொடுப்பனவும் இல்லாமல் இந்த புராதான இடங்களை பாதுகாத்து வருகின்றோம். எங்களது மக்களின் சமய காலாசாரங்களானது இந்த நாட்டில் உள்ள புராதன இடங் களைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல், கலாசாரம் சார்ந்த விடயங்களை பாதுகாக்கும் நோக்குடனே ஆலயங்களும், அமைப்புக்களும் செயற்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவிலே குறுந்தூர்மலையிலே ஆதிகாலம் தொட்டு ஆதிலிங்கேஸ்வரர் வழிபாடு முறைகள் இருந்து வருகின்றது. ஆனால் தொல்பொருள் திணைக்களம் அங்கு சென்று வழிபாட்டு முறைகளிலே இருக்கக்கூடிய எங்களது வழிபாட்டு சின்னங்களை சிதைத்துள்ளது. ஆகவே ஜனாதிபதி மற்றும் பிரதமர் எங்களது வழி பாட்டு முறைகளை அறிந்த . அனைத்து ஆலயங்களிலும் சென்று வழிபடுவதற்கு சமத்துவமான சமவுரிமையை வழங்க வேண்டும்- என்றார். (ஐ-110)

# அடிப்படை வசதிகளின்றி தவிக்கும் தர்கா நகர்!



**மன்னார், ஜன.25**

**மன்னார் பிரதேச செயலர் பிரிவில் உள்ள எருக்கலம்பிட்டி தர்கா நகரில் அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்திக் கொடுக்கப் படவில்லை என்று கிராம மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

கடந்த 50 ஆண்டுகளாக இந்த நிலைமை தொடர்கின்றது என்றும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அந்தக் கிராம மக்கள் தெரிவிக்கையில்

தர்கா நகரைச் சூழ சுமார் 100க்கும் அதிகமான குடும்பங்கள் வாழ்கின்றன. அங்குள்ள வீதிகள் பலவும் மணல் வீதிகளாகவே உள்ளன. அவற்றின் ஊடாக வாகனங்கள், சைக்கிள்கள் செலுத்த முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

அவசர உதவி அல்லது இடர் நிலைமை ஏற்பட்டால் தற்காலிகமாகத் தங்குவதற்கோ, இடம்பெயர்ந்துதங்கவோ ஏற்பாடுகள் எவையும் இல்லை. மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகள் கூட திருத்தப்படுவதில்லை.

இந்தக் கிராமத்தில் கழிவகற்றல் செயற்பாடும் ஒழுங்காக மேற்கொள்ளப்படுவதில்லை. வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால், இரவில் நடமாட முடியாத நிலைமை இருக்கின்றது.

வீதிஅமைப்பதற்காகஒருதொகை நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. வீதி திருத்தப்படாத நிலையில் வீதி திருத்தப்பட்டது என்று ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு நிதி விடுவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, மாவட்டச் செயலர், பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோருக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்தக் கிராமத்தில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க -வேண்டும் என்றனர். (எ-156)



காணாமல் ஆக்கப்பட்ட கணவன் மற்றும் பிள்ளைகளைத் தேடி வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அன்னலட்சுமிக்கு வாழ்வாதாரத்துக்கும், அவரது பிள்ளைகளின் கல்விக்கும் என ஒரு லட்சம் ரூபா நோர்வே புலம்பெயர் வாழ் தமிழ் பற்றாளரால் வழங்கப்பட்டுள்ளது. (ரி5)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. விதையனைத்தும் விருட்சம் அமைப்பால் 37 மாணவர்களுக்கு இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ரி5-222)

## சாதாரண தர மாணவர்களுக்கு விசேட கற்றல் நடவடிக்கைகள்



மன்னார், ஜன.25

மன்னாரில் தொற்றுப் பரவல் அதிகரித்து வரும் நிலையில் மன்னார் கல்வி வலயத்தில் இந்த முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி விசேட கற்றல் நடவடிக்கைகளை மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

மன்னார் வலயக்கல்வி பணிப்பாளரின் அனுமதியோடு, பிரதான பாடங்களுக்கான கற்றல் நடவடிக்கைகள் இணைய செயலி ஊடாக முன்னெடுக்க பட்டுள்ளன.

மன்னார் கல்வி வலயத்தில் இந்த முறை சாதாரண தரப் பரீட்சைக்கு ஆயிரத்து 400 மாணவர்கள் தோற்றவுள்ள நிலையில் அவர்களைத் தனியாகவும் குழுவாகவும் இணைய செயலி ஊடாக இணைத்து பிரதான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. மாதிரி வினாத்தாள்களும் அச்சிடப்பட்டு பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. (வ-56)



## கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜன.25

கணேசபுரம் கிராம மக்களுக்கும் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிதனுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கணேசபுரம் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் சனசமூக நிலையத்தின் அங்கதவர்கள் மற்றும் கிராம மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மழைகாலத்தில் வெள்ளநீர் வடிந்தோடுவதற்கு வடிகால் மற்றும் மதவுகள் அமைக்க வேண்டியுள்ளமை தொடர்பாகவும், கிராமத்தின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் தவிசாளரிடம் கணேசபுரம் மக்கள் கோரிக்கைகளை முன்வைத்தனர். (ரி5-ரி1)



கிளிநொச்சி மாவட்ட தமிழ்ச் சங்கத்தின் வாழ்நாள் தலைவர் இறைபிள்ளையின் அகவை நாள் விழா தமிழ்ச் சங்க உறுப்பினர்களால் நேற்றுமுந்தினம் கொண்டாடப்பட்டது. (ரி5-ரி1)


## மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 06 . 1962



மறைவு 24 . 01 . 2021

**திரு. சின்னையா வசந்தகுமார்**

அத்தியடியை பிறப்பிடமாகவும் தலையாழியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா வசந்தகுமார் அவர்கள் 24.01.2021 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சின்னையா மற்றும் செல்வபாக்கயிம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் வசந்தமலர் ஆகியோரின் அன்பு மருமகனும், நீலரஞ்சினி (ஞானக்குழந்தை ஆசிரியர்) யின் அன்புக் கணவரும், தாட்ஷாயினி, வைஸ்ணவதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதயகுமார், சுரேந்திரகுமார், ராம்குமார், ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஷாமினியின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2021) திங்கட்கிழமை பி.ப 2.00 மணிளவில் தலையாழி ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 410 4752**


கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த வருடம் 3 ஆம் தவணை தேர்வுப் பரீட்சையில் முதல் மூன்று நிலைகளைப் பெற்ற மாணவர்களைக் கௌரவித்து சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. (ரி5-ரி1)



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...


### யாழ்ப்பாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு

**R.I.B.Group (Pvt) Ltd நிறுவனத்தில்**

- **விற்பனை மேலாளர்** (Sales Executive)
  இத்துறையில் 1 வருட அனுபவம் தேவை
  வயது - 30-40
  Salary Package : 46,000/-
- **விற்பனை பிரதிநிதி** (Sales Represantative)
  இத்துயையில் 1 வருட அனுபவம் தேவை
  வயது - 25 - 35
  Salary Package : 40,000/-
- சாரதி - (Driver)
  கனரகம் - (Heavy Vehicle)
  வயது - 25-40

**குறிப்பு:** உரிய ஆவணங்களுடன் சமூகமளிக்கவும், நேர்முகத் **தேர்வு நாளை (26.01.2021) செவ்வாய்க்கிழமை.**

**நேரம் :- முற்பகல் 10.30 - மதியம் 12.30 வரை**

**இடம் :- இல.83, காதிஅபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.**

தொடர்புகளுக்கு :-

**077 388 3879, 076 128 9656, 021 221 7626**


### மரண அறிவித்தல்



**பிறப்பு 13.04.1956 இறப்பு 24.01.2021**

**தேவராசா யோகேஸ்வரி**

தாவடி தெற்கு கொக்குவிலை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா யோகேஸ்வரி அவர்கள் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தேவராசா அவர்களின் மனைவியும், நிர்மலா, தாரணி, சுரேஸ், சங்கீதா ஆகியோரின் தாயாரும், தவராசா-ஞானரூபி, நிர்மலா-குரு பரன், தாரணி-விக்கினேஸ்வரன் (சுவிஸ்) சுரேஸ், கிருஷ்ண குமார்- சங்கீதா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2021) திங்கட் கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாவடி தெற்கு, கொக்குவில்.**

**தகவல்: பேரப்பிள்ளைகள், பிள்ளைகள், மருமக்கள், 077 6910 453**

### மரண அறிவித்தல்

**தாயின் மடியில் 30 . 04 . 1930**



**தாயக மண்ணில் . 24 . 01 . 2021**

**கலைப்பருதி, கலாபூசணம், கலைவாருதி, அண்ணாவியார்**

**கந்தவனம் இளையதம்பி (சந்நதியப்பா)**

இன்பர்சிட்டி பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் இளையதம்பி (சந்நதியப்பா) நேற்று (24.01.2021) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கந்தவனம் பார்வதி, விசியம்மா ஆகியோரின் பாசமிகு மூத்த மகனும், அமரர் வைரமுத்து சின்னத்தங்கம்மாவின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் சிவராசா, அமரர் குருசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வடிவாம்பிகை, அமரர் தெய்வநாயகி ஆகியோரின் மைத்துனரும், பார்வதி தேவி, சரஸ்வதி, மகேஸ்வரி (அமரர்), ஜெயஈஸ்வரி (அமரர்), மங்கலேஸ்வரி, ராஜேஸ்வரி, திலகவதி, யோகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் தந்தையும், தங்கவேல் (அமரர்), ஜெகதீஸ்வரநாதன், நிமலநாதன் (நடேசப்பிள்ளை), மகேந்திரராசா, நாகேந்திரம் (அமரர்), செல்வமனோகரன், கிருஸ்ணராஜா, பாலச்சந்திரன் ஆகியோரின் மாமனாரும், தாய்நிலத்திலும், புலத்திலும் வசிக்கும் உறவுகளின் பெரியப்பாவும், மாமனாரும், மைத்துனரும், பேரனாரும், பூட்டனாரும், கொள்ளுப்பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2021) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளில் அவரது இல்லத்தில் நடைபெற்று, புகழுடல் பருத்தித்துறை சுப்பர்மடம் இந்து மயானத்தில் விதைக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**ஸ்ரீநிலாகரன் (பூட்டன்-லண்டன்)**
**குடும்பத்தினர்.**

### பிரதேச செயலர்...

விருது பெற்றுள்ளார்.ராான்ஸ்பரன்ஸி இன்ரநஷனல் சிறிலங்கா நிறுவனத்தால் ஊழலற்ற நிர்வாகத்துக்கான குறுஞ்செய்தி மூலமான வாக்கெடுப்பில் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் பொதுமக்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இந்தத் தேர்தல் நேற்றுமுன்தினம் 22ஆம் திகதி முடிவடைந்த நிலையில் அவருக்கு பெருமளவில் வாக்குகள் குவிந்தன. இதனையடுத்து இலங்கையின் ஊழலற்ற அதிகாரிகளில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டு நேற்று அவருக்கு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. விருதை முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய வழங்கினார். (ம-26)

### நினைவுதினம்....

டங்களில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்துடன் மட்டு மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியம், யாழ் ஊடக அமையம் மற்றும் தெற்கு ஊடக அமைப்புக்களுடன் இணைந்து நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. நிகழ்வில், ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலர் தூவி, ஈகைச்சுடர் ஏற்றி 2 நிமிட மௌனன அஞ்சலி செலுத்தப்பட்டது. 2006ஆம் ஆண்டில் உயர்தரக் கல்வியை முடித்த பின்பு, பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருந்த 5 மாணவர்கள், திருகோணமலை கடற்கரையில் சுட்டுக்கொல்லப்பட்டனர். படுகொலை செய்யப்பட்ட மாணவர்களை சுகிர்தராஜன் நிழற்படமெடுத்து செய்தி வெளியிட்டிருந்தார்.

மாணவர்களின் இறப்புக்கு கைக்குண்டுத் தாக்குதலே காரணம் என்று விசாரணையை திசைதிருப்ப முயற்சித்தபோது, இவர் எடுத்த நிழற்படங்கள் குறித்த மாணவர்கள் தலையில் சுடப்பட்டு இறந்ததை தெளிவாக எடுத்துக் காட்டின. இதனால் சர்வதேச ரீதியில் பல்வேறுபட்ட அழுத்தங்கள் ஏற்பட்டன. இதையடுத்து 2006ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்துக்கு அருகாமையில் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு ஆசிரிய உதவியாளராக கடமையாற்றக் கூடிய பெண் ஒருவரும் கணினி தமிழ் தட்டச்சு செய்யக்கூடிய பெண் ஒருவரும் தேவை.

**தொடர்பு: 077 774 2942**


### கோத்தாவின்...

என்பதை சர்வதேசம் நன்கு அறியும் இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

'இலங்கைக்கு சீனாவின் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையிலேயே ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களை ராஜபக்ச அரசு நிராகரித்தது. சீனாவை நம்பிக்கொண்டு அரசு எடுக்கும் முயற்சிகள் நாட்டை மிகப்பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்போகின்றன' எனவும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணையை ஏற்றுக்கொள்கிறோம் என மஹிந்த ராஜபக்ச அரசு சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரமே தொடர்ச்சியாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நல்லாட்சி அரசு புதிய தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி இலங்கை இராணுவத்தைப் போர்க்குற்றங்களில் சிக்கவைக்கவில்லை. போர்க்குற்றங்களில் சிக்கவிருந்த இராணுவத்தையும், அதற்குத் துணை நின்ற தலைவர்களையும் எமது அரசில் எடுத்த நடவடிக்கைகள் காரணமாகக் காப்பாற்றினோம். 2015ஆம் ஆண்டு அமெரிக்கா கொண்டுவந்த புதிய தீர்மானத்தை நாம் நிராகரிக்காது இணை அனுசரணை வழங்கியதன் மூலமாகவே இலங்கைக்கான சர்வதேச ஒத்துழைப்புகள் கிடைக்கப்பெற்றன.

தற்போதைய அரசு ஐ.நா தீர்மானங்களிலிருந்து விலகிக்கொள்வதாக கூறியுள்ள நிலையில், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் அதற்கான எதிர்ப்பை வெளிப்படுத்த ஆரம்பித்துவிட்டன. இந்த நிலைமை தொடருமாயின் இலங்கை தனித்து விடப்படுவதுடன், ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரத் தடைகளுக்கும் உள்ளாக நேரிடும்' என்றார். (ம-22)


### சிங்களம்

**சிங்களம் பேச, எழுத, வாசிக்க இலகுவான முறையில் கற்பிக்கும் நேரடி வகுப்புக்கள் ஆரம்பம்**
**சனி, ஞாயிறு மற்றும் வாரநாட்களில் 25.01.2021 முதல்**

இம்முறை G.C.E O/L (இரண்டாம் மொழி) மற்றும் அரச ஊழியர்களுக்கான ORAL பரீட்சைகளுக்கு தோற்றுபவர்களுக்காக விஷேட வகுப்புகள் நடைபெறும்.

**பாடசாலை மாணவர்களுக்கான தரம் 6, 7, 8, 9, 10 வகுப்புக்களும் பாடப்புத்தகத்திற்கு அமைவாக கற்பிக்கப்படும்.**

**ஸ்ரீ மாஸ்டர்**
**077 703 3729**

**ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்**

இல 41, நக்காலேன், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். | இல 164, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (Science Faculty Gate (opposite))


### கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
திரு.சு.புருஷோத் அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்
**தம்பிப்பிள்ளை சிங்க அரியரட்ணம்**

தோற்றம் 23 . 02 . 1953



மறைவு 24 . 01 . 2021

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி ... ஓம் சாந்தி ... ஓம் சாந்தி ...

துயர்பகிரும் - ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிரதேச செயலகம் காரைநகர்.


# சயன்ஸ் அக்கடமி

நல்லூர், முருகன் ஆலயம் முன்பாக | நாவலர் வீதி, அரியாலை

**தொலைபேசி : 0775388471, 0773126807, 021 222 9016**

**தரமான கல்வியை என்றும் வழங்கும் முதற் தர நிறுவனம்**

நிகரற்ற சிறப்பான நிர்வாக கட்டமைப்பின் கீழ் யாழ் முன்னணி ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த வழிகாட்டலில் 40 வருடங்களுக்கு மேலான கல்வி பாரம்பரியத்தில் என்றும் முன்னணியில் திகழும் எமது நிறுவனம் சாதனை ஆண்டில் தொடர்கின்றது.

## புதிய கல்வியாண்டு - 2021

| வெற்றித்தேர்வு ஆரம்ப பிரிவு தரம் 1 முதல் தரம் 5 வரை வாராந்தம் பரீட்சைகளோடு | தமிழ் மொழி மூல வகுப்புகள் தரம் 6 முதல் O/L வரை | ENGLISH MEDIUM CLASSES GRADE 6 - O/L |
|---|---|---|

இவற்றுடன் ICT, ENGLISH LITERATURE, சிங்களம் ஆகிய பாடங்களும் !

**இவை அனைத்தும் ஒரே இடத்தில் பெற்று சாதனை படையுங்கள் !**

**ஆரம்பம் - 28.01.2021 வியாழக்கிழமை காலை 9.00 மணி**

**அனுமதிகள் வழங்கப்படுகின்றன.** "எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (25.01.2021 ) தொடக்கம்
சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலய
அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்கும்




எமது வித்தியாலய பிரதி அதிபர்

**திரு. சதாசிவம் துளசிதாசன் (J.P)**

B.Com, H.N.dip.in.acct., P.G.Dip.in.Edu., M.Ed., P.G.Dip.in.Edu- mgmt (English) P.D.Dip.in.Spcl-Edu (R) M.Sc.in.Edu - Mgmt (English) (R)

அவர்களை மென்மேலும் பட்டங்கள் பல பெற்று பல்லாண்டு காலம் சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ சந்திரபுர**
**ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்,**
**மட்டுவில், சாவகச்சேரி.**

## 31 ஆம் நாள் நினைவுதினமும் நன்றி நவிலலும்



தோற்றம் 21.03.1972 மறைவு 26.12.2020

கடந்த 26.12.2020 அன்று
இறைபதமடைந்த

**அமரர் திரு. சிமியோன் கியோமர் (வவா)**

அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலை பேசியிலும், சமூகவலைத்தளங்கள் மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அன்றைய நிகழ்வை நேரலை மூலம் ஒலிபரப்பு செய்த திரு. ரவிச்சந்திரன் (சுவிஸ்) அவர்கட்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் மனமாந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

கொவிட் 19 கொரோனா சூழ்நிலை, சுகாதார நடைமுறைகள் காரணமாக இந் நிகழ்விற்கு தங்கள் யாவரையும் அழைக்க இயலாமைக்கு மிகவும் வருந்துகின்றோம்.

இல.122, கோயில் வீதி,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக

தோற்றம் 20 . 07 . 1939



மறைவு 24 . 01 . 2021

### திருமதி பாலசிங்கம் காமாட்சிஅம்மா

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலசிங்கம் காமாட்சிஅம்மா நேற்று (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை நாகம்மா தம்பதிகளின் புதல்வியும், பறுவதத்தின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை கமலாம்பிகை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பாலசிங்கம் (பத்தர்) அவர்களின் மனைவியும், கமலேஸ்வரி, காலஞ்சென்ற தனபாலசிங்கம் (சுப்பர்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற தயாளன் மற்றும் சசிகலாதேவி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான சண்முகரத்தினம், சதாசிவம் (புத்திசாலி), மற்றும் சரஸ்வதி, தனலட்சுமி, நகுலேஸ்வரி, காலஞ்சென்ற ஜெயக்குமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவீந்திரன் யாழினி, விஷ்ணுகுமார் கமலினி, ஜனார்த், ரஜீத், துஷ்யரூபன் மயூரி, துளசிராம் கஸ்தூரி, சுரேஸ் தனுஜா, அனுராம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அச்சயன், ஆரபி, பாருணி, கிருபரன், மயூராகவன், யுகித், கிருத்திக், ரேதிகா, லசிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 957, K.K.S றோட்**
**தட்டாதெரு, யாழ்ப்பாணம்.**
**077 716 6492, 077 848 4804**
**077 645 0362**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்**



பிறப்பு 19.07.1959
இறப்பு 25.01.2002
திதி: 29.01.2021

குடும்பத்தின் குலவிளக்கே
அன்பின் திருவுருவே
பாசத்தின் பிறப்பிடமே
பண்பின் உறைவிடமே
விண்ணுலகம் சென்று பத்தொன்பது
ஆண்டுகள் கடந்து விட்டாலும்
தங்கள் நினைவுகளால் தவிக்கின்றோம்.

சுன்னாகம். குடும்பத்தினர்

## அமைச்சரவையில் மாற்றம் என்பது போலிச் செய்தியே!



கொழும்பு, ஜன.25
எதிர்வரும் வாரம் அமைச்சரவையில் மாற்றம் ஒன்று மேற்கொள்ளப்பட வுள்ளது என வெளியாகும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைப் பதவிகள் பலவற்றில் மாற்றம் ஏற்படவுள்ளது எனவும் இராஜாங்க அமைச்சர்கள் பலர் நியமிக்கப்படவுள்ளனர் எனவும் வெளியான தகவலை பிரதமர் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பில் கலந்துரையாடல் எதுவும் நடைபெறவில்லை. அமைச்சரவை மாற்றம் என்ற தகவல் அடிப்படையற்ற தொன்றாகும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (ற-இ)


**வீடு வாடகைக்கு வழங்கப்படும்**

இலக்கம் 106 பலாலி வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடு அரசாங்க உத்தியோகத்தர்களிற்கு வாடகைக்கு விடப்படும்.

**தொடர்பு: ரமேஸ்- 077 925 2370**

உ சிவமயம்
**PERSONAL CLASS**

தரம் 3 முதல் O/L வரையான மாணவர்களுக்கு அனைத்து பாடங்களும் & A/L மாணவர்களுக்கு பௌதீகவியல், பொருளியல், வணிகக்கல்வி உட்பட அனைத்து பாடங்களும் கற்பிக்கப்படும். (துரித மீட்டல் O/L) 074 040 7405

**ENGLISH LITERATURE CLASSES**
**Grade - 9, 10 & 11**
MR.G.RANGIT THEVARAJAN
-HNDE, Spl.Trd Eng
Teaching Excellent & Achievement Scholar (U.S.A)-2019
21, Palaly Road 077 706 6000

# P.P.T நிறுவனத்தின் விசேட சலுகை



ups sky cargo solutions DHL

உள்நாட்டு / வெளிநாட்டு பார்சல் சேவை UK 1000/-

300க்கு மேற்பட்ட நாடுகளுக்கான
வெளிநாட்டு
பார்சல் சேவை நடைபெறுகிறது.
நிபந்தனைக்கு உட்பட்டது.

**A/C 1000/-**
பருத்தித்துறை/நெல்லியடி
யாழ்ப்பாணம்-கொழும்பு

**Non A/C 900/-**
பண்டத்தரிப்பு/சித்தங்கேணி
சங்கானை/மானிப்பாய்
யாழ்ப்பாணம்-கொழும்பு.

| யாழ்ப்பாணம் | புறக்கோட்டை | வெள்ளவத்தை |
|---|---|---|
| 0764408947 | 0764408954 | 0764408951 |
| 0775731318 | 0112320336 | 0775755175 |

# 15 கிலோ மீற்றர் யானை வேலி அமைத்துத் தருமாறு கோரிக்கை

புதுக்குடியிருப்பு, ஜன.25
காட்டு யானைகளிடம் இருந்து பாதுகாப்புப் பெற 15 கிலோமீற்றர் தூரத்துக்கு யானை வேலி அமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு மேற்கு பகுதியைச் சேர்ந்த கைவேலி, வேணாவில், மருதமடு, பகுதிகளில் உள்ள வயல் செய்கையாளர்கள், மற்றும் மேட்டு நிலப் பயிர்செய்கையாளர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர். இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள், காட்டுயானையால் நாள்தோறும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றோம் எனவும் இந்தப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களையும் மேட்டு நில பயிர்களையும் பாதுகாக்க யானை வேலி அமைத்துத் தர வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். புதுக்குடியிருப்பு- பரந்தன் வீதியில் உள்ள மஞ்சல் பாலத்தில் இருந்து கைவேலி, வேணாவில், தொடக்கம் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் எழுவாலி வரையான பகுதி வரை யானை வேலி அமைத்து கொடுத்தால் தங்கள் வாழ்வாதாரம் காட்டு யானையில் இருந்து பாதுகாக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(வ-19)

## பகிரங்கக் கேள்வி அறிவித்தல்

துணுக்காய் வலயக்கல்வி அலுவலகத்தினால் கீழ்வரும் பாடசாலையின் பழைய கட்டடங்களை இடித்து அகற்றும் பொருட்டு கேள்வி கோரப்படுகின்றது. மேற்படி கட்டடங்களை 26.01.2021 ஆம் திகதியில் இருந்து 10.02.2021 வரை நேரில் பார்வையிட்டு கேள்விக்கான விண்ணப்பக் கட்டணமாக ரூபா 250.00 இனை அலுவலக நாட்களில் பி.ப 03.00 மணிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலக நிதிக்கிளையில் செலுத்தி கேள்விப்பத்திரத்தை வலயக்கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் 10.02.2021 ஆம் திகதி பி.ப 1.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். அதனுடன் மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையினை செலுத்திப் பற்றுச்சீட்டினை கேள்வியுடன் இணைத்து 10.02.2021 ஆம் திகதி மாலை 2.00 க்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றைய தினம் உடனடியாக திறக்கப்படும். கேள்விகள் சமர்ப்பித்த யாவரும் தவறாது சமுகமளித்தல் வேண்டும்.

தகைமையுடைய கேள்விதாரருக்கான அனுமதி வழங்கப்பட்ட பின்னர் உரிய தொகை யினை அலுவலகத்தில் செலுத்தி 14 நாட்களினுள் குறித்த வேலையை பாடசாலை செயற்பாட்டிற்கும், மாணவர்களுக்கும், சுற்றுச்சூழலுக்கும் இடையூறின்றி முடிவுறுத்தி பொருட்களை அகற்றுதல் வேண்டும். கட்டடத்தை அத்திவாரத்துடன் முழுமையாக அகற்றிய பின்னரே அகற்றப்பட்ட பகுதியிலுள்ள மூலப்பொருட்களை வெளியே எடுத்துச்செல்ல முடியும்.

| பாடசாலை பெயர் | கட்டடங்களின் அளவு | மீளளிப்பு வைப்புத் தொகை |
|---|---|---|
| மு/மல்லாவி மத்திய கல்லூரி | 40'x30' - குடும்ப ஆசிரியர் விடுதி<br>40'x30' - ஆசிரியர் விடுதி<br>50'x30' - அதிபர் விடுதி | 150,000.00 |
| மு/பாண்டியன்குளம் ம.வி | 27'x26' - ஆசிரியர் விடுதி | 70,000.00 |

**திருமதி.மாலதி முகுந்தன்,**
**தலைவர்,**
**கேள்விச் சபை,**
**வலயக் கல்வி அலுவலகம்,**
**துணுக்காய்.**

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் காணப்படும் தாதிய உத்தியோகத்தர் பதவிக்கான ஒப்பந்த அடிப்படையிலான நியமனம் - 2021

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ்வரும் வைத்தியசாலைகளில் நிலவும் தாதிய உத்தியோகத்தர் பதவிக்கான வெற்றிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்பும் தகுதியு டையவர்கள் விண்ணப்பங்களை 15.02.2021 ஆம் திகதிக்கு முன்னர் **"செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல:393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்"** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**01. ஆட்சேர்ப்பிற்கான சேவை நிபந்தனைகள் :**

- தாதிய உத்தியோகத்தர் கடமைகளை ஆற்றுவதற்கான உடல் உள ஆரோக்கியத்தை தகுதித் சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
- விண்ணப்ப முடிவுத்திகதியில் 65 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- வட மாகாணத்தில் காணப்படும் தாதிய வெற்றிடங்களின் அடிப்படையில் நியமன அதிகாரியினால் பணிக்கப்படும் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.
- அரச தாதிய சேவையில் கடமையாற்றி முறையாக ஓய்வு பெற்றவராக இருத்தல் வேண்டும்.
- தாதிய சேவையில் தாமாகவே பதவியை விட்டு விலகிய (V.O.P) அல்லது ஒழுக்காற்று காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெற்றவரல்லாதவராக இருத்தல் வேண்டும்.

**02. சம்பளம் :**

சுகாதார அமைச்சின் 07/02/2018ம் திகதிய 01-56/2018ம் இலக்க சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைவாக சம்பளம் வழங்கப்படும்.

**குறிப்பு:**

**ஆளணி வெற்றிட விபரம் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் என்பனவற்றை www.np.gov.lk என்ற வடக்கு மாகாணசபையின் இணையத்தளம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.**

**சி.திருவாகரன்.**
**செயலாளர்,**
**மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,**
**வடக்கு மாகாணம்.**
**25.01.2021**

## மரண அறிவித்தல்

தோற்றம்
14.08.1934



மறைவு
23.01.2021

### திருமதி பொன்னம்மா (மீனா) கோபாலசாமி

நாவலபிட்டியை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியையும் கண்டியையும் வசிப்பிடமாக கொண்ட திருமதி பொன்னம்மா (மீனா) கோபாலசாமி அவர்கள் (23.01.2021) சனிக்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலம்சென்றவர்களான திரு.வீரலிங்கம் - ஆசாரி தம்பதிகளின் மகளும், காலம்சென்றவர்களான துரையப்பா பத்தர் தம்பதிகளின் மருமகளும், திரு.துரையப்பா பத்தர் கோபாலசாமியின் (சரவணாஸ் டை கட்டிங்ஸ்) அன்பு மனைவியும், கமலகுமாரி (யாழ்ப்பாணம்), நிர்மலா (கொழும்பு), துரையப்பா (யாழ்ப்பாணம்), குமுதகுமாரி (கண்டி), சுபத்ரா (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயும், மெய்ஞானம் (யாழ்ப்பாணம்), ஸ்ரீராம் (கொழும்பு), புஷ்பநாதன் (கண்டி), செல்வ கலியுகவரதன் (லண்டன்), கௌரி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவலக்ஷ்மன், சௌமியா, அபர்ணா, பிரியங்கா, ஹரி பிரசாத், காயத்ரி, தீபன், பிரணவி, கோபி, துவாரகன், சாய் கிஷோர் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், வேதிக், கிரித்தீசன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை கண்டியில் உள்ள மஹியாவ மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்

**தகவல்: குடும்பத்தினர்**
**0774844324**
**0766457999**

**92, கன்னாதிட்டி றோட்,**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
23.02.1953



மறைவு
24.01.2021

### வைத்திய கலாநிதி
### தம்பிப்பிள்ளை சிங்கஅரியரட்ணம்
(பாரம்பரிய சித்த வைத்தியர்)

யாழ்ப்பாணம் தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை சிங்கஅரியரட்ணம் நேற்று (24.01.2021) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி தம்பிப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியரின் அன்பு மகனும், தியாகராசா, மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், சற்குணதேவி (ஓய்வுபெற்ற குடும்பநல உத்தியோகத்தர்) அவர்களின் அன்புக் கணவரும், புருஷோத் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் - காரைநகர்), கிரிஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷ்ணவேணி (ஓய்வுநிலை பேராசிரியர் - யாழ். பல்கலைக்கழகம்).மோகனராணி (ஓய்வு நிலை ஆசிரியர்), லோகேஸ்வரி (ஜேர்மனி), சிவமோகன் (ஓய்வுபெற்ற வைத்தியசாலை பரிசாரகர் - சங்கானை), ஜெயமோகன் (ஜேர்மனி), சாந்தமலர் (கொழும்பு), யோகேந்திரன் (வலம்புரி அழகு மாடம் வட்டுக்கோட்டை). சுஜினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வமலர் (பண்ணாகம்), பாலச்சந்திரமூர்த்தி (பண்ணாகம், அருணகிரிநாதன் (நோர்வே), சிவயோகநாதன் (பண்ணாகம்), பரந்தாமன் (பண்ணாகம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 806 5495**

**வட்டுத் தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

## அரசின் அபகரிப்பை...

தமிழர் தாயகத்தில் மக்களின் வாழ்வுரிமையைப் பாதுகாக்கும் நோக்கில் அனைத்துத் தமிழ்க் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களையும் உள்ளடக்கிய அவசர கலந்துரையாடல் நேற்று யாழ். நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**அவர் மேலும் தெரிவித்ததாவது:**

**அரசைச் சாராத, தமிழ் அரசியல் சார்ந்த அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகளுடன் இன்று (நேற்று) கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இருந்தோம். 10 தமிழ் அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதில் 9 கட்சிகள் கலந்து கொண்டிருந்தன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கலந்து கொள்ளவில்லை. எதிர்காலத்தில் அவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என நம்புகின்றோம்.**

எந்தக் கட்சி, எந்த முன்னணி என்பது பிரச்சினை இல்லை. தமிழ் மக்கள் பாதிக்கக்கூடிய வகையில் அசுரவேகத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரசின் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கான உபாயங்களையும், வேலைத் திட்டங்களையும் வகுப்பதற்காகத் தான் இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்த முயற்சிக்கு எந்த ஒரு தனிக் கட்சியோ, கூட்டணியோ அல்லது முன்னணியோ, என உரிமை கோராது எல்லோரும் பங்காளிகளாக இணைய வேண்டும்.

இந்தக் கலந்துரையாடல் சுமுகமாக நடைபெற்றுள்ளது. இதன் தொடர் நடவடிக்கைகளைப் பொறுத்து, மக்கள் இந்த விடயங்களை அறிந்துகொள்ள முடியும். இந்த நடவடிக்கைக் குழு என்பது மக்கள் போராட்டங்களை எவ்வாறு முன்னெடுப்பது மற்றும் ஏனைய உத்திகளை எவ்வாறு வகுப்பது போன்ற விடயங்களையும் ஆலோசனைகளையும் பொதுமக்களிடமிருந்து பெற்றுக் கொண்டு ஒரு சரியான இலக்கை நோக்கிப் பயணிக்கும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறிகாந்தா, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் தலைவி அனந்தி சசிதரன், வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்களான எம். கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், விந்தன் கனகரத்தினம் யாழ்ப்பாண மாநகரசபை முதல்வர் மணிவண்ணன், சிவில் அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-ப26)

## கறுப்பு....

வதி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

1948ஆம் ஆண்டில் ஆட்சிபீடம் ஏறிய சிங்கள பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களால் பல இலட்சக்கணக்கான தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். பல லட்சம் பேர் புலம்பெயர வைக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்களுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையே நடைபெற்ற மோதல் என்பது ஒரு அரசாங்கம் சார்ந்தோ அல்லது கட்சி சார்ந்தோ நடைபெற்ற விடயமல்ல. ஆட்சிக்கு வந்த அனைத்து தரப்புகளும் இலங்கைத் தீவு சிங்கள பௌத்த நாடு என்ற அடிப்படையிலேயே செயற்பட்டார்கள். இப்போதும் செயற்பட்டுக்கொண்டு உள்ளார்கள்.

2009ஆம் ஆண்டில் ஆயுத வழியில் நசுக்கப்பட்டு முடிவடைந்த போர் தமிழினப் படுகொலையோடு நிறைவுக்கு வந்திருந்தது.

அத்தகைய தமிழினப்படுகொலை நடைபெற்றபோது அதனோடு நிகழ்ந்த பல குற்றங்களை மூடி மறைப்பதற்கு - 2009ஆம் ஆண்டில் ஆட்சியிலிருந்த இனவழிப்பு அரசாங்கம் மட்டுமல்லாது சிங்கள தேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசாங்க தரப்புகளுமே முயன்றன. அதே சூழலே இன்றும் உள்ளது.

தமிழர்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் பறித்துவிட்டு சிங்கள தேசம் தனது 73ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவதற்கு உள்நாட்டிலும், புலம்பெயர்தேசங்களிலும் தயாராகிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறான நிலைப்பாட்டில் தமிழர்களாகிய நாம் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை புறக்கணித்து தமிழின அழிப்புக்கு எதிரான சர்வதேச நீதியை பெறுவோம், பொறுப்புக்கூறலும் தமிழ் மக்களுக்குரிய நீதியும் கிடைப்பதாக இருந்தால் முழுமையான சர்வதேச குற்றவியல் நீதிமன்ற விசாரணையூடாகவே சாத்தியமாகும்.

இலங்கையின் சுதந்திரதினத்தை கரிநாளாகப்பிரகடனப்படுத்திவடக்குகிழக்கு தழுவிய மக்கள் எழுச்சி பேரணி நடாத்த எமது அமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் பேரணி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் பேரணி மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் ஆரம்பமாகி காந்தி பூங்காவை சென்றடையும் என்றுள்ளது. (ம-6,19)

## மூதாட்டியின்...

பவுண் தங்கச் சங்கிலி நேற்றுமுந்தினம் மாலை அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம், கல்வியங்காடு பகுதியில் இடம்பெற்றுள்ளது. வயோதிப் பெண்ணும் அவரது மகளும் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளனர். அவர்களை பின்தொடர்ந்த ஒருவர் தாயின் கழுத்திலிருந்த இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலியை அறுத்தெடுத்துக் கொண்டு தப்பித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதுதொடர்பில் தகவல் அறிந்த யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி , விசாரணைகளை முன்னெடுத்தார். சம்பவ இடத்துக்கு அண்மையாக உள்ள சிசிரிவி பதிவின் அடிப்படையில் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டார். அவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

அவரது உடைமையில் இருந்து 75 ஆயிரம் ரூபா மற்றும் 25 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய அதிதிறன் அலைபேசிகள், 90 ஆயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டன. சங்கிலியை விற்பனை செய்து குறித்த அலைபேசிகள் இரண்டையும் சந்தேக நபர் வாங்கியுள்ளார் என்றும் அவர் போதைக்கு அடிமையானவர் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது. குறித்த சந்தேக நபர் யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்பு குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ப-26)

## நீரில்...

அடிகாயங்கள் எதுவும் காணப்படவில்லை. இவ்வாறு அவர்களது உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தகவல்கள் வெளியிட்டன.

கடந்த 18ஆம் திகதி கச்சதீவுக்கு அண்மித்த பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த, தமிழக மீனவர்களின் படகு மூழ்கியது. இலங்கைக் கடற்படையினரின் படகு மோதியதாலேயே அந்தப் படகு மூழ்கியது என்றும் அதன் காரணமாகவே அதிலிருந்தவர்கள் உயிரிழந்தனர் என்றும் தமிழக மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர். ஆனால் இலங்கைக் கடற்படையினர் தமது டோறா படகுடன் கடற்கொந்தளிப்பால் தமிழக மீனவர்களின் படகு மோதியது என்று குறிப்பிடுகின்றனர். இந்த நிலையில் படகில்பயணித்த 4 தமிழக மீனவர்களது உடல்களும் கடற்படையினரால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டன. கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனைகளில், நீரில் மூழ்கிய மையே அவர்களது உயிரிழப்புக்குக் காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது என மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தமிழக மீனவர்களால் குற்றம் சுமத்தப்படுவதைப் போன்று அடிகாயங்கள் எதுவும் காணப்படவில்லை என்றும் மேலும் கூறப்படுகின்றது. இதேவேளை நேற்று முன்தினம் சனிக்கிழமை 4 மீனவர்களது சடலங்களும் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலையில் அன்றைய தினம் இரவே இறுதிக் கிரியைகள் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-ஒ.5)

## கைதான...

எப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளிலேயே இந்த முடிவு தெரியவந்தது.

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 9 பேர் கடந்த 10 நாள்களாக ஊர்காவற்றுறை நீதிமன்றின் உத்தரவின் கீழ் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களிடம் நேற்று மாதிரிகள் பெறப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதிலேயே ஒருவருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. (ம-26)

## மோ.சைக்கிள்...

மேலும் இரண்டு பேர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். புளியங்குளம் முல்லைத்தீவு பிரதான வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது. இரண்டு மோட்டார் சைக்கிள்களில் பயணித்துக்கொண்டிருந்த இளைஞர்களின் மோட்டார் சைக்கிள்கள் தண்டுவான் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் கரையில் இருந்த மின்சாரத் தூணுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நெடுங்கேணி கரடிப்புலவுப் பகுதியைச் சேர்ந்த தயாபரன் (வயது 31) என்ற இளைஞன் உயிரிழந்தார். ஏனைய இருவரும் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ப)

## முல்லை...

நேற்றுமுன்தினம் சிறப்பு அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்தியாவில் இருந்து குறித்த கஞ்சா கடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது. கஞ்சாவை இறக்கியவர்கள் படகு மூலம் கடல் வழியாகத் தப்பிசென்றுள்ளனர் என்று அதிரடிப் படையினர் தெரிவித்தனர். குறித்த கஞ்சாப் பொதிகள் முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றை இன்று நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-ப.19)

## தூதுவர்...

தலைவருமான மிலிந்த மொரகொட விடயமும் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. மிலிந்த மொரகொடவை இந்தியாவுக்கான தூதுவராக நியமிக்கும் ஜனாதிபதி கோத்தபாயவின் யோசனைக்கு உயர் பதவிகளுக்கான நாடாளுமன்ற குழு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி அனுமதி வழங்கியிருந்தது. வெளியுறவு அமைச்சின் வரலாற்றில் முதற்தடவையாக அமைச்சரவை தரத்திலான பதவியாக இந்தப் பதவி அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது வெளியாகியுள்ள தகவல்களுக்கு அமைவாக அமைச்சருக்கு நிகரான தரத்திலான பதவியுடைய தூதுவரை நியமிக்க முடியாது என்று இந்தியா அறிவித்துள்ளது. இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராக பொறுப்பேற்பதில் தனக்கு நாட்டமில்லை என்று மிலிந்த மொரகொடவும் தற்போது அறிவித்துள்ளார் என இன்னொரு தகவலும் வெளியாகியுள்ளது. இதனால் இந்தியாவுக்கான தூதுவர் பதவிக்கு தகுதியானவர்களை இலங்கைத்தரப்பு தேடிக்கொண்டிருப்பதாக அறியமுடிகின்றது. இலங்கைக்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் பயணம் மேற்கொண்டு, ஜனாதிபதி கோத்தபாய உள்ளிட்டவர்களைச் சந்தித்தபோது அந்தச் சந்திப்புக்களில் மிலிந்த மொரகொட பங்கேற்றிருக்கவில்லை.

இதேவேளை கனடாவும் புதிய தூதுவர் நியமனத்துக்கு அனுமதி வழங்கப்பின்னடிப்பதாக அறியமுடிகின்றது. ஓய்வுபெற்ற விமானப் படைத்தளபதி எயார் சீப் மார்ஷல் சுமங்கல டயஸை கனடாவுக்கான தூதுவராக இலங்கை அரசு கடந்த ஆண்டு நவம்பர் 9ஆம் திகதி அறிவித்திருந்தது. எனினும் கனடா இன்னமும் இந்த நியமனத்துக்கு அனுமதி வழங்கவில்லை. இலங்கை தொடர்பான ஜெனிவா தீர்மானத்தின் முக்கிய நாடுகள் குழுவின் அங்கத்தவரான கனடா இலங்கையில் பாதுகாப்புத்துறை சீர்திருத்தம் முன்னெடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று சவுதி அரேபியாவுக்கான தூதுவராக இலங்கை அரசால் நியமிக்கப்பட்ட அஹமட் ஏ.ஜவாத்தின் நியமனத்தை இன்னமும் சவுதி அரேபியா ஏற்றுக்கொள்ளவில்லை. சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவராக முன்னரும் ஜவாத் பதவி வகித்திருந்தார். இலங்கைப் பணிப்பெண் ரிஸானா நவீக் விடயத்தில் சவுதிக்கும் இலங்கைக்கு இடையே நிலவிய இராஜதந்திர பதற்ற நிலையின் போது ஜவாத் முக்கிய பங்காற்றியிருந்தார்.

நான்கு மாத வயதுடைய நயிவ் அல் குதுபாய் என்ற குழந்தையை கொலை செய்த குற்றச்சாட்டில் 2013ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதி தலை துண்டிக்கப்பட்டு ரிஸானா நவீக் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்போது சவுதிக்கான தூதுவராக இருந்த ஜவாத் நாட்டுக்கு திருப்பி அழைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

# இளைஞர் குழுவின் அட்டகாசத்தால் நீதிபதியின் வீட்டுக்கு ஓடிய மக்கள்!

## மன்னாரில் நேற்று பயங்கரம்



மன்னார், ஜன.25
மன்னார் சாவல்கட்டுக் கிராமத்துக்குள் புகுந்த இளைஞர் குழு ஒன்று, கிராமத்தில் உள்ள வீடுகளில் புகுந்து, ஆண், பெண் என்ற பாகுபாடுகள் ஏதுமின்றித் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதல் சம்பவத்தால் அச்சத்தில் உறைந்த மக்கள், நீதி கேட்டு, மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியில் வாசஸ்தலத்துக்கு முன்னால் கூடினர்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை, இடம்பெற்றுள்ளது. 10 மோட்டார் சைக்கிள்களில், ஹெல்மெட்,மற்றும் முகக்கவசங்களுடன், ஆயுதங்கள் தாங்கியவாறு சாவல்கட்டுக் கிராமத்துக்குள் புகுந்த குழுவினர், அங்குள்ள வீடுகளுக்குள் புகுந்து சரமாரியாகத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் பெண் உள்ளிட்ட இருவர் படுகாமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அச்சமடைந்த கிராம மக்கள் சம்பவத்துக்கு நீதி கேட்டு, மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்துக்கு முன்னால் ஒன்றுகூடினர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மக்களை அழைத்துச் சென்று தாக்குதல் குழுவுக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கினர்.

கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்பு இளைஞர் கும்பலொன்று சாவல்கட்டு இளைஞர் ஒருவரை தாக்கியுள்ளது. இந்த நிலையில் மீண்டும், கடந்த ஞாயிற்றுக்கிழமையும், குறித்த குழுவினர் அந்த இளைஞன் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். இது தொடார்பாக மன்னார் பொலிஸார் குறித்த கும்பலைச் சேர்ந்த சிலரைக் கைதுசெய்தனர். அவர்கள் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களே நேற்று சாவல்கட்டுக் கிராமத்துக்குள் புகுந்து தாக்குதலில் ஈடுபட்டனர் என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ப-60)

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ராச வீதியில் ராச வீதி சந்திக்கு அருகாமையில் 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
**தரகர் தேவையில்லை. 2 பரப் பாக பிரித்து கொடுக்கப்படும்.**
தொடர்பு - குரு
077 8051 655
077 5963 845

**அன்பொளி கல்வியகம்**
**புதிய கல்வியாண்டு - 2021**
**தரம்: 1,2,3,4,5** நேரடி வகுப்புக்களுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
27.01.2021 (புதன்) தொடக்கம் பி.ப. 2.30 - 5.30 மணிவரை அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.
**தரம்: 3,4,5, ZOOM** வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
விரும்பியவற்றில் இணைந்துகொள்ளலாம்.
**இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.**

**பணியாளர் தேவை**

**யாழ்நகரில் இயங்கும் பிரபல நகை காட்சியறைக்கு அனுபவம் உள்ள நகை விற்பனையாளர் மற்றும்**
கல்வியறிவு உடைய கணக்கு எழுதக்கூடிய வியாபாரம் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
*தகுதிக் கேற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.*
*நேர்முகத்தேர்வு:*
நாளையும் நாளைமறுதினமும் 25, .26 ஆம் திகதிகளில் காலை 9.30 மணிமுதல் 11.30 மணிக்குள் சுயவிபரக் கோவையுடன் நேரில் வரவும்.

**சந்தோஷ் ஜுவலர்ஸ்**
இல.97 A, 99V மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## திருமதி ரஞ்சனாதேவி பாலேந்திரன்

(ஓய்வுபெற்ற முகாமையாளர் தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்)



தோற்றம் 03.06.1956
மறைவு 23.01.2021

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகுவம் கொண்ட திருமதி ரஞ்சனாதேவி பாலேந்திரன் நேற்றுமுன்தினம் (23.01.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதபிள்ளை - இராசமணி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற திரு.பாலேந்திரன் (ஓய்வுபெற்ற பிரதியதிபர் - இராமநாதன் கல்லூரி) அவர்களின் அன்பு மனைவியும், Dr. கார்த்திகா, ஜனகன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற இராசமனோகரன், தேவமனோகரன், இராசதேவி, இராசமலர், சுலோசனா, கிருபாகரன், செல்வாகரன், ஜங்கரன், திருக்குமரன் ஆகியோரின் சகோதரியும், தெய்வநாயகி, காலஞ்சென்ற சுந்தரலிங்கம், பாஸ்கரன், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன், காலஞ்சென்ற பராசக்தி, விமலாதேவி, காலஞ்சென்ற பாலச்சந்திரன், ஶ்ரீபதி, துஷ்யந்தி, பரமா, உதயகுமார், யுவராஜ், மதுரா, ரஜிதா, சந்திரிகா மற்றும் புகழினி ஆகியோரின் மைத்துனியும், அனு, அனந்தன், பானு, பாரி, ஜதுர்ஷா, விக்னேஷ், ஹரிஷ், ஹரிணி, கேதுசன், கேதுசா, தனுஜா, ரமணன், யாழினி, விசாகன், பாலினி ஆகியோரின் பெரியம்மாவும், செந்தூரன் றாகினி (அகிலஷ்), கஸ்தூரி சிவதாரன் (அபிஷயன், அகரன்), சர்மிலன், சாமந்தி, மாதுமை, ஜயபவன், சயான், கிரிஷான், மதுஷான், சேயோன், ரணேஷ், சீரோன், சுவாதி, சரிகா, அவந்திகா, யுவந்திகா, சுபிக்ஷா, அபிக்ஷா மற்றும் அதிரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2021) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இ[illegible]த்தில் நடைபெற்று பூதடவுடல் தகனக்கிரியைக்கா காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் கிழக்கு,
இணுவில்

தகவல்:
குடும்பத்தினர்
ஜனகன் - 077 452 2568
சர்மிலன் - 077 655 1739



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.